Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 06 (09.04.2003) புதன்கிழமை இதழ் :188

திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
**பலிக்களம்** (திருப்பாடுகளின் காட்சி)
நாளை ஆரம்பமாகின்றது
10,11,12,13 ஏப்ரல் 2003
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
- திருமறைக்கலாமன்றம்.
(சி-767)




திருமலை - உவர்மலையில் நேற்று ஆரம்பமான கலை, பண்பாட்டுக் கழகத்தின் மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2 இசை, நடன, நாடக விழாவில் - திருமலை போர்ப்பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் கில்மன் தேசியக் கொடியேற்றுவதை முதற்படத்திலும், தளபதிகள் உதயன், தேவன், சஞ்சே ஆகியோருடன் புதுவை இரத்தினதுரை, பாப்பா, இளம்பரிதி ஆகியோர் அகவணக்கம் செலுத்துவதை இரண்டாவது படத்திலும், அங்கு நடைபெற்ற கலை நிகழ்வு ஒன்றை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# கடல் மோதல்கள் குறித்து ஆராய புலிகள்-ரெலவ்சன் இன்று சந்திப்பு!

## கிளிநொச்சியில் நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ரெலவ்சன், இன்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்து - கடற்பிரதேசத்தில் மோதல்களைத் தவிர்ப்பது பற்றிப் பேசவிருக்கிறார்.**

கிளிநொச்சியில் உள்ள அரசியற்துறை நடுவப் பணியகத்தில், இன்று காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத தலைவருடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் பெக்கா பிகர்வன் மற்றும் செய்தித் தொடர்பாளர் ரொகில்சன் ஆகியோரும்,

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை மற்றும் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆகியோரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் பிரசுரங்கள் பறித்து எரிப்பு!

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியின் துண்டுப் பிரசுரங்கள், நேற்று பொதுமக்களால் சங்கானையில் எரிக்கப்பட்டன. நேற்றுக் காலை சங்கானை நகர்ப் பகுதியில் ஈ.பி.டி.பியினர் தமது துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக்கொண்டிருந்தனர். அப்போது அப்பிரசுரங்களைப் பறித்த மக்கள் சிலர் அவற்றைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சார்ஸ் நோயினால் பேச்சு இடம்மாறும்?

'சார்ஸ்' எனும் சுவாசத் தொற்று நோய், தற்போது கிழக்காசிய நாடுகளில் வேகமாகப் பரவி வருவதால், அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களை தாய்லாந்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்து நோர்வே ஆலோசித்து வருகிறது.

இது குறித்து விடுதலைப் புலிகளும் அரசும் விடுத்த கோரிக்கையை அடுத்தே, தாய்லாந்தில் நடைபெறவிருந்த அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களை வேறிடத்துக்கு மாற்றுவது குறித்து நோர்வே திட்டமிட்டு வருகிறது.

## இராணுவப் பகுதியில் புலிகள் நடமாட்டம் குறித்து ஆராய்வு!

### திருமலையில் பதுமன் - ரெலவ்சன் பேச்சு



போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன், திருகோணமலைக் கட்டளைத்தளபதி கேணல் பதுமனை நேற்று சந்தித்து உரையாடினார்.

திருமலையிலிருந்து படகு மூலம் மூதூர் சென்ற ரெலவ்சன், அங்கிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூருக்குச் சென்று, கேணல் பதுமன் மற்றும் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார்.

பிற்பகல் ஒரு மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகளின் இரவு நேர நடமாட்டம் பற்றி இதில் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

திருமலையில் உள்ள புலிகளின் கட்டுபாட்டுப் பகுதிகளுக்கிடையே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் உள்ளதால் - போராளிகள் தமது பகுதிகளுக்கு உணவு மற்றும் மருந்துப்பொருட்களைக் கொண்டுசெல்லும்போது படையினரால் பிரச்சினைகள் ஏற்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



அரசியல் கோமாளியும் இப்ப அதி முக்கிய ஆளாகிறார் பார்!

## புதிய படைத்தளம் அமைப்பு குறித்து ஆராய

## ஒஸ்ரின் பெர்ணான்டோ இன்று யாழ். வருகிறார்

யாழ்.நகரில் புதிய படைத்தளம் அமைப்பது தொடர்பான இடத்தைத் தெரிவு செய்வதற்காக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ இன்று காலை 8 மணிக்கு யாழ். வருகின்றார்.

இதேவேளை - தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று இவ்விடயம் பற்றி ஆராய யாழ்.வருகை தரவுள்ளனர்.(சு)



பக்தாத்தில் வீடு ஒன்றைச் சோதனையிடும் அமெரிக்கப் படைவீரன். உள்ளே - அமெரிக்கத் தாக்குதலில் நேற்றுக் கொல்லப்பட்ட மூன்று சர்வதேசப் பத்திரிகையாளர்களில் ஒருவரான ரொய்ட்டர் செய்தியாளர்.

## வடமராட்சியில் வேவு விமானம் நோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் விமானப் படைக்குச் சொந்தமான வேவு விமானமொன்று வட்டமிட்டுச் சென்றுள்ளது.

நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் பகல் 11 மணிவரை - வடமராட்சி கிழக்கு, தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று, குடாரப்பு, நாகர்கோவில் மற்றும் அதனை அண்டிய கடற்கரைப் பகுதிகளிலும் இந்த வேவு விமானம் தாழப்பறந்து நோட்டமிட்டுச்சென்றுள்ளது.

அத்துடன், கடற்படையின் ரோராப் படகுகள் சில, கரையிலிருந்து 4 கடல்மைல் தொலைவில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

## இந்திய, அமெரிக்க தூதுவர்கள் அனுராவைச் சந்தித்துப் பேச்சு!

அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ், நேற்று எதிர்க்கட்சிப் பிரமுகர் அனுரா பண்டாரநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். சுமார் ஒன்றரை மணிநேரம் இச்சந்திப்பு நீடித்தது.

நேற்றுமுன்தினம் இந்தியத் தூதுவர் நிருபம் சென்னும் அனுராவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சமாதான முயற்சிகளில் இந்தியா சந்தேகம் கொள்வதாகவும், ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் சமாதான முயற்சிகள் தொடர்ந்தால் அதற்கு இந்தியா ஆதரவு தரும் எனவும் தம்மிடம் இந்தியத் தூதுவர் குறிப்பிட்டதாக அனுரா பின்னர் தெரிவித்தார். (01)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
(சி-730) 021 - 2223916, 0777 - 517019

# யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில இலக்கியத்தில் சாதனை!

யாழ். நகரப் பாடசாலைகளில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்றயாழ். இந்துக்கல்லூரி மற்றுமோர் சாதனையையும் புரிந்துள்ளது.

இநதக் கல்லூரியின் ஆறு மாணவர்கள், ஆங்கில இலக்கியத்தில் அதிவிசேட சித்தி (A) பெற்றுள்ளனர். இதுவரை யாழ்ப்பாணத்தில் ஆங்கில இலக்கிய பாடத்தில், ஒரே பாடசாலையில் இவ்வளவு மாணவர்கள் அதிவிசேட சித்தி பெற்றிருக்கவில்லை.

இதேவேளை - பெரியபுலம் மகாவித்தியாலயத்திலிருந்து தோற்றிய பேரம்பலம் மாலினி என்ற மாணவியும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி இரட்ணசாமி வித்தியாவும் 10 A பெற்றுள்ளனர். (ரா)

## 10 A பெறுபேறு பெற்ற யாழ். இந்துவின் மாணவர்கள்



சிவப்பிரகாசம் மயூரன் | கதிரேசபிள்ளை தர்ஸனன் | பொன்னுத்துரை சிவபாலன் | மகாதேவன் ஜெயசுதன்

## சங்காபிஷேகமும் மகேஸ்வர பூசையும்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த கிராம ஊர்வலம் நேற்று செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து இன்று புதன்கிழமை ஆலயத்தில் சங்காபிஷேகம் நடைபெற்று மகேஸ்வர பூசையும் (அன்ன தானம்) இடம்பெறும்.

## சனசமூக நிலையங்களின் சமாச தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின், 2003 ஆம் ஆண்டுக்கான சமாசத் தெரிவு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு, கொக்குவில் உப- அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருப்பதாகவும், அதில் அனைத்து சனசமூக நிலைய சமாசப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய நாள் இனிய நாள்

**09-04-2003 - புதனிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தொழில் சமம், புத்திர பந்துக்களால் கவலை, நன் மதிப்பு, சிநேக நன்மை |
| இடபம் | :- பலவித ரோகபயம், தொழில் குறைவு மனச்சோர்வு, அதிகாரசித்தி |
| மிதுனம் | :- தனவிருத்தி, சிநேகலாபம், புத்திரசுகம், குடும்ப அனுகூலம், இனசன பிரிவு. |
| கர்க்கடகம் | :- மனக்கவலை, விஷபீடை, ஆயுதம், காயம் மூலம் உபத்திரவம், காரிய விக்கினம். |
| சிங்கம் | :- நேத்திர ரோகம், தேக சுகக் குறைவு, வாக்குக் கலகம், இனசன விரோதம். |
| கன்னி | :- வாக்கு வசீகரம், நன்மதிப்பு, மனப்பயம், தாழ்ந்த நிலை, குடும்பச் சிறப்பு. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- புத்திரரால் கவலை, தேக மெலிவு, மன மகிழ்ச்சி, தருமகாரிய சித்தி. |
| விருச்சிகம் | :- காரிய சித்தி, சௌக்கியம், சந்தோஷம், தொழில் விருத்தி. |
| தனு | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, பணவரவு, பந்து விரோதம், காரிய அனுகூலம். |
| மகரம் | :- தார புத்திரருக்கு ரோக பீடை, புத்தி திறமை, தொழில் சிறப்பு, பெரியோர் மதிப்பு. |
| கும்பம் | :- பிரயாண நஷ்டம், தாழ்ந்த நிலை, ரோக பீடை, நிலைப் பிரிவு, உஷ்ணம். |
| மீனம் | :- நற்கீர்த்தி, காரிய சித்தி, தனலாபம், களஸ்திர புத்திர நன்மை, |


சித்திரைப் புத்தாண்டின் சிறப்புத் தள்ளுபடி
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்புகளுக்கும்
INTER NET BROWSING
செய்துகொள்ள
விசேட சலுகைக் கட்டணத்தில்
ஏப்ரல் 07 முதல் - ஏப்ரல் 13 வரை
மேலும் விவரங்களுக்கு
SRI MURUGAN
Tele Communication & Agency Post Office
303, K.K.S. Road, Jaffna.
T.P. 021-222 2670, 021-222 3588
(சி-772)



திறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜய்,ரீமா சென் நடித்த
பகவதி
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
BEST OF THE BEST
10.04.2003 முதல் Jurassic Park-3
(சி-731)



ராஜா யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும்
(சி-732)



நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த (உயர்தரம்) 2003
வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு
அனுசரணை ~
கொமர்ஷல் வங்கி உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka
Institute of Informatics Studies
இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
Elephant house Necto
ஆசிரியர் குழாம்
வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam
பொருளியல்:- திரு. இராஜேஸ்வரன்
காலம்:- 11.04.2003
நேரம்:- காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.



மலிவு விற்பனை
20% முதல் 50% வரை
புதுக்கணக்குப் போடவிருப்பதால்
பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.
ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-753)
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

**நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்**

*(மணியம் களஞ்சியம் - கொடிகாமம்)*

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம் 08-04-2003 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சுரேஸ்குமார் (மகன் - J.T.I.)
பரம்தில்லைராஜன் (மருமகன்)

*உசன், மிருசுவில்.* (307)


STP கணனி நிறுவனம் நமது ஈழநாட்டுடன் இணைந்து நடாத்தும்
தென்மராட்சி மக்களுக்கான இலவச கணனிக் கருத்தரங்கு
காலம் : 16 . 04 . 2003 நேரம் : 10.00 – 1.00
இடம் : சாவகச்சேரி இந்துக்கல்லூரி
STP கணனி நிறுவனம், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
நமது ஈழநாடு.

### உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம்:

# பேச்சுக்களுக்கான சர்வதேச ஆதரவை உறுதிப்படுத்தும்!

### ஜப்பானியத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ரோக்கியோவில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம், சமாதானப் பேச்சுக்களுக்கான சர்வதேச ஆதரவினை உறுதிப்படுத்தும் என்று ஜப்பானியத் தூதுவர் செய்சுறோ ஒட்சுகா தெரிவித்தார்.

அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானின் ஆக்கபூர்வமான ஆதரவினை வெளிப்படுத்தவே இந்த மாநாடு ரோக்கியோவில் நடத்தப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கான முன்னேற்பாடாக பிரஸெல்ஸில், அமைச்சர் மிலிந்த மொறகொட-ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளைச் சந்தித்து வருகிறார். சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் மிலிந்த மொறகொட பேச்சுக்களை நடத்திவருகிறார்.

இவர் பிரஸெல்ஸ் செல்வதற்கு முன்னர், பிரிட்டனில் வெளிநாட்டு அபிவிருத்திக்கான அமைச்சர் கிளையர் ஷோட்டையும் சந்தித்துப் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் நிலைப்பாட்டை அறியவே ஜனாதிபதி சந்திரிகா அங்கு சென்றார்!

### டி.எம்.ஜெயரட்ண கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக, இந்தியாவின் நிலைப்பாட்டை அறிந்துகொள்வதற்கே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- புதுடில்லிக்கு விஜயம் செய்திருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்தார்.

இலங்கையில் அமைதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அமைதி முயற்சிகள் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாட்டை நாம் முதலில் அறிந்துகொள்ளவேண்டும். ஏனெனில், இந்தியா எமது அயல்நாடாகவும், பிராந்திய வல்லரசாகவும் இருந்து வருகிறது.

இந்தச் சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்திய அரசின் கருத்தை அறிந்து, அதற்கேற்பவே நாம் செயற்படுதல் வேண்டும். அப்போதுதான் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தமுடியும் என்றும் டி.எம்.ஜெயரட்ண மேலும் தெரிவித்தார்.



டி.எம்.ஜெயரட்ண

# 'சார்ஸ்' நோயாளிகள் இலங்கையில் இல்லை!

### தொற்றுநோய் தடுப்புப்பிரிவு பணிப்பாளர் அறிவிப்பு

உயிர்கொல்லி நோயான 'சார்ஸ்' நோய் இலங்கையில் பரவாமல் கட்டுப்படுத்துவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாகச் சுகாதார சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக நேற்று முன்தினம் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் கொழும்பில் அவசர மாநாடு ஒன்றும் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் சுகாதார சேவை அதிகாரிகளுடன், விமான நிலைய அதிகாரிகள், துறைமுக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

விமான நிலையங்களூடாக வரும் பயணிகளையும், கப்பல்களில் வரும் மாலுமிகளையும் கண்காணிப்பது, துறைமுக, விமான நிலைய ஊழியர்களை நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன், நோய்த் தொற்றுக்கு இலக்கானோருக்குச் சிகிச்சை வழங்குவோருக்கு நோய் ஏற்படாமல் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் குலதிலக பேசும்போது -

இலங்கையில் சார்ஸ் தொற்று நோய் இருவருக்கு ஏற்பட்டிருப்பதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என்றும் தெரிவித்தார். பிலிப்பைன்ஸ் விமானப் பணிப்பெண் மற்றும் ஜப்பானிய மாலுமி ஆகியோருக்கு இந்நோய் தொற்றியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டபோதும், அவர்களுக்கு நோய்தொற்றியிருந்தது உறுதி செய்யப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - விமான நிலையங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படுவதைத் தடுக்க விசேட முகமூடிகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (க,ச)

# இந்திய மீனவர் மீதான விளக்க மறியல் நீடிப்பு

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்ததாகக் கடற்படையினரால் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 26 இந்திய மீனவர்களையும், எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

இந்திய மீனவர்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் எந்த அறிவுறுத்தலையும் பொலிஸாருக்கு வழங்கவில்லை என்று நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்தே, நீதிவான் 26 இந்திய மீனவர்களையும் விளக்க மறியிலில் வைக்க உத்தரவிட்டார். (க)

# ரெலவ்சன் இன்று வன்னிக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சன் இன்று வன்னிக்குச் சென்று, விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது, கடற்பரப்பில் இடம்பெற்ற பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படும் எனத் தெரியவருகின்றது.



நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சென்னையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பூச்செண்டு கொடுத்து வரவேற்றதைப் படத்தில் காணலாம்.

# இனப்பிரச்சினைக்கு பொதுவான தீர்வுத்திட்டம் கதிர்காமர் - ரணில் சந்திப்பில் இணக்கம்!

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் பொதுவான ஒரு இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டம் உருவாக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகி வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைக்குப் பொதுவானதொரு தீர்வுத் திட்டத்தை இரு கட்சிகளும் இணைந்து உருவாக்குவது பற்றிய இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் நடத்திய பேச்சுக்களிலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஏப்ரல் முதலாம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடனும் மேலும், பல எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது, இரு கட்சிகளும் இணைந்து பொதுவான தீர்வுத்திட்டமொன்றை முன்வைப்பதன் அவசியத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருந்தார்.

பிரதமரின் கருத்தை ஏற்றுக்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, இது தொடர்பாக லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து இணக்கப்பாட்டை ஏற்படுத்துமாறு கேட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

இதையடுத்து, லக்ஷ்மன் கதிர்காமரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நடத்திய பேச்சுக்களின் போதே, இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும், இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

# வேட்டைத் துப்பாக்கியுடன் 16 வயதுச் சிறுவன் கைது!

### தென்மராட்சி - கச்சாயில் சம்பவம்

வேட்டைத் துப்பாக்கியுடன் 16 வயதுச் சிறுவன் ஒருவரை இராணுவத்தினர் கைதுசெய்து, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். கடந்த 5 ஆம் திகதி கச்சாய் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஜெயபாலன் சஞ்ஜீவன் என்ற 16 வயதுச் சிறுவனே இராணுவத்தினரால் கைதானவராவார். இவர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரியவருகிறது.

# கண்காணிப்புக்குழுவுக்கு மேலதிக அதிகாரம்; கடற்படையின் அறிக்கை அரசாங்கத்திடம்!

போர்நிறுத்த நடைமுறைகளில் மேலதிக அதிகாரங்களை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு வழங்குவது தொடர்பான திட்டநகல் அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி இந்த திட்டநகல் இரு தரப்புக்களுக்கும் கையளிக்கப்பட்டதாகக் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த திட்டநகல் தொடர்பாக ஏப்ரல் 17 ஆம் திகதிக்கு முன்னர், இரு தரப்பினரிடமிருந்தும் சிபார்சுகளைத் தாம் எதிர்பார்ப்பதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சட்ட ஆலோசகர் பெக்கா விகர்வாஸ் தெரிவித்தார்.

17 ஆம் திகதிக்குள் இருதரப்பும் இந்தத் திட்டநகலை ஏற்றுக்கொள்வதாக அறிக்கை சமர்ப்பித்தால், ஏப்ரல் 24 ஆம் திகதி ஓமந்தையில் நடைபெறவுள்ள சந்திப்பில் இணக்க உடன்பாடு கைச்சாத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர், பெக்கா விகர்வாஸ் கடந்த சனியன்று தகவல் வெளியிட்டபோது, 24 ஆம் திகதி இந்தச் சந்திப்பு மட்டக்களப்பில் இடம்பெறும் என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, புதிதாக உருவாக்கப்படவுள்ள - கடற்பிரச்சினைகள் தொடர்பான நடைமுறைகள் குறித்த கடற்படையினரின் கருத்துக்களைத் தாம், அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்திவிட்டதாகக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

தாம், கடற்படையினரின் அதிகாரத்துக்குட்பட்ட வகையிலேயே செயற்படவிரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - புலிகள் தமது வர்த்தகக் கப்பல்களை இலங்கைக் கடற்பரப்பு ஊடாகப் பயணிப்பதைச் சட்டபூர்வமாக மேற்கொள்ள விரும்புவதாக உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக் குத் தெரிவித்துள்ளார்.

# 37 அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படும்

முப்பத்தியேழு அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டடப்பொருட்கள் கூட்டுத்தாபனம், ரயில்வேதிணைக்களம், தபால் திணைக்களம், கட்டுநாயக்க விமான நிலையம், இலங்கை மின்சாரசபை போன்ற பல நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படவுள்ளன.

இந்த நிறுவனங்களால் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்பட்டுவருகின்றது. கடந்த காலங்களில் அரசியல் தலையீட்டினால் அதிக வேலை வாய்ப்புக்கள் வழங்கியபடியாலும், இந்நிறுவனங்கள் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதையிட்டே இவற்றைத் தனியார்மயமாக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



## முதலாவது அகவையில்



பெயர் : ச.சப்ரீனா
முகவரி: 39, வேலப்பர் வீதி, அரியாலை.

## இரண்டாவது அகவையில்

பெயர் : ஜ.சானுஜா
முகவரி : மறவன்புலோ மேற்கு, சாவகச்சேரி.



## ஆறாவது அகவையில்



பெயர் : கி.லத்திகா
முகவரி: 34B, நகரசபை விடுதி, வவுனியா.

## ஒன்பதாவது அகவையில்

பெயர் : இ.சனுஜா
முகவரி: 39,வேலப்பர் லேன், அரியாலை.



## பத்தாவது அகவையில்



பெயர் : பி.திவாகர்
முகவரி: உடுவில் தெற்கு, சத்தியபுரம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:-----------------------------------
முகவரி :-----------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------
பெற்றார் ஒப்பம்

# ஜெயலலிதாவின் தூண்டுதலிலேயே மத்திய அரசின் அறிக்கை தயாரிப்பு!

## வைகோ குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தூண்டுதலின் பேரிலேயே பொடா வழக்குக் குறித்த மத்திய அரசின் முதலாவது வாக்குமூலம் தயாரிக்கப்பட்டிருந்ததாக மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.



வைகோ

சென்னை நீதிமன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விசாரணைகளின் போதே வைகோ இவ்வாறு குறிப்பிட்டார்.

மத்திய அரசாங்கம் வைகோ மீதான வழக்குத் தொடர்பாக முதலாவதாகத் தாக்கல் செய்த வாக்கு மூலம் தொடர்பாகப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய்க்கோ அல்லது துணைப்பிரதமர் எல்.கே. அத்வானிக்கோ தெரி யாமலேயே, அம்மனு உயர்நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஜெயலலிதாவுக்கு நெருக்கமான சட்டத்தரணிகளே இந்த வாக்குமூலத்தைத் தாக்கல் செய்ததாகவும், இதனால்தான் இரண்டாவது வாக்குமூலத்தைத் தாக்கல் செய்ய வேண்டியநிலை மத்திய அரசுக்கு ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.



ஜெயலலிதா

அத்துடன், பொடா சட்டத்தைத் தான் தனிப்பட்ட ரீதியாக ஆதரிக்கவில்லை என்றும், பாரதீய ஜனதா கூட்டணியில் இடம் பெற்ற கட்சி என்ற வகையிலேயே தாம் ஆதரவளித்ததாகவும் வைகோ மேலும் தெரிவித்தார். (லி)

# 60 வயதுக்கு மேற்பட்ட அதிகாரிகளை அரசசேவை ஆணைக்குழு பதவிநீக்கம்

மூன்று மாதங்களுக்கு முன்னர் மனிதவள கல்வி அபிவிருத்தி அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட அதிகாரிகள் 15 பேரை, அந்த அமைச்சின் செயலாளர் வி.கே.நாணயக்கார பதவியிலிருந்து நீக்கியுள்ளார்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையின்படியே இவர்கள் நீககப்பட்டுள்ளனர். இவர்கள் மீது அரசியலமைப்புச் சட்டத்தின் 55-1, 55-3 ஆகிய சரத்துக்களுக்கேற்பவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரசாங்க சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்களைப் பதவியில் அமர்த்துவதால், இவர்களின் பின்னால் உள்ள அதிகாரிகளின் உரிமைகளைப் பறிப்பதாக அரசாங்க சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன் பிரகாரம் இனிமேல் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் சேவையில் தொடர்வதற்கு- பதவி நீடிப்பு வழங்கக்கூடாது என்று அரசாங்க சேவை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

# கொடிகாமம், அச்சுவேலி பகுதிகளிலும் தனி உதவி அரச அதிபர் பிரிவுகள்

## விரைவில் உருவாக்கப்படும் என்கிறார் அமைச்சர் மகேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மகேஸ்வரன் அலுவலகத்தைத் திறந்து வைத்தார். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் அமைச்சர் மகேஸ்வரன் உரையாற்றுகையில் -

கொடிகாமம் அச்சுவேலிப் பிரதேசங்களிலும் தனித்தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கவுள்ளதாகவும், மருதங்கேணியைத் தனியான பிரதேச சபையாக உருவாக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (லி,9)

# 3000 ஆசிரியர்களை நியமிக்க பிரதமர் ரணிலுக்குச் சிபார்சு!

## கல்வி அமைச்சர் வழங்கினார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மூவாயிரம் ஆசிரியர்களைப் புதிதாக நியமிக்க நடவடிக்கை எடுக்கலாம் எனக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சிபார்சு செய்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 3000 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இவ் வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகள் மற்றும் தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பதன்மூலம் வேலைவாய்ப்புக்களையும் வழங்கலாம் எனக் கல்வி அமைச்சர் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். (01)

# யாழ்.காக்கைதீவுப் பகுதியில் கழிவுப் பொருட்களால் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் வீதியோரமாகக் கொட்டப்படும் கழிவுகளால் அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுவருகின்றது.

இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றின் எலும்புகள், தோல் மற்றும் கழிவுகள் இப்பகுதியில் கொட்டப்படுகின்றன.

இதனால், இப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இந்த வீதியூடாகச் செல்லும் தொழிலாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மூக்கைப் பொத்திப் பிடித்தவாறு பயணஞ்செய்ய வேண்டியுள்ளது.

இப்பகுதிகளில் அநாதரவாக விடப்படும் நாய்கள் மற்றும் அவற்றின் குட்டிகள் வீதியில் பயணஞ் செய்யும் வாகனங்களில் மோதி உயிரிழக்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு உயிரிழக்கும் நாய்கள் அங்கிருந்து அகற்றப்படாமல் வீதியோரங்களில் விடப்படுகின்றன. இதனாலும் அங்கு துர்நாற்றம் வீசி வருவதுடன், பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (118)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கைகலப்பில் காயம்

இரு சகோதரர்களிடையே ஏற்பட்ட கைகலப்பிலே ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனியன்று காரைநகர்ப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் பொன்னன் சற்குணராஜா (வயது 33) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சு)

## குருத்துவக் கல்லூரி அதிபராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ மதகுருமாரைப் பயிற்றுவிக்கும் உயர் கல்விப் பீடமான புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் நான்காவது அதிபராக அருட்தந்தை எஸ்.வி.பி.மங்களராஜா அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார்.

1976 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், 1987 இல் உரோமபுரியிலுள்ள இறகோரியன் பல்கலைக்கழகத்தினால் திருச்சபை வரலாற்றுத்துறையில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர், அதே பல்கலைக்கழகத்தில் 1994 இல் திருச்சபை வரலாற்றுத்துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

## புலமைப்பரிசில் கருத்தரங்கு

தரம் 5 மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு, மேல் மாகாண கலவித் திணைக்கள ஆசிரிய ஆலோசகர்களால் இன்று புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையிலும், நாளை கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.30 வரை நடைபெறும் இக்கருத்தரங்குகளில், சகல தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களும் கலந்து கொள்ளலாம் என்றும், மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் வரவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்





# மாணவர் மலர்

✳ கீழே தரப்பட்டுள்ள தகவல்களை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

> **கேசவன் கண்டியிலே பிறந்தான். அவனது தந்தையார் பெயர் தில்லையம்பலம். அவனது தாயார் பெயர் திலகவதி. அவன் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி பிறந்தான். அவனது வீட்டு முகவரி பூங்கா வீதி, கண்டி என்பதாகும். வீட்டு இலக்கம் 24. அவன் இந்து சமயத்தைச் சேர்ந்தவன். கேசவன் கண்டி நகரிலே வசிப்பதால், வீட்டிற்கு அருகிலே தபாற்கந்தோரும் புகையிரத நிலையமும் உண்டு. அவனது தந்தை கண்டி தபாற்கந்தோரில் தபாலதிபராகக் கடமையாற்றுகின்றார்.**

மேலே தரப்பட்டுள்ள தகவல்களை ஆதாரமாகக்கொண்டு கேசவனுடைய விபரங்களைப் படிவத்தில் எழுதுக.

### விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு

முழுப்பெயர் : ..........................................................
நிரந்தரமுகவரி : ..........................................................
..........................................................
சமயம்: .............................. பால்: ..........................
பிறந்ததிகதி : .......... வருடம்.......... மாதம்........ திகதி.......
கிட்டிய தபாற்கந்தோரின் பெயர் : ......................................
கிட்டிய புகையிரதநிலையத்தின் பெயர் : ......................................
தந்தையார் பெயர் : ..........................................................
தந்தையார் தொழில் : ..........................................................

✳ கீழே தரப்பட்டுள்ள கடிதத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

8, கோவில் வீதி
கொழும்பு.
01. 04. 2003

அன்புள் அப்பா,

நான் நல்ல சுகமாக இருக்கின்றேன். அம்மா, தம்பி, அக்கா ஆகியோரும் நல்ல சுகமாக இருக்கின்றனர். நீங்களும் சுகமாக இருக்க இறைவனை வேண்டுகின்றேன்.

எதிர்வரும் 16. 04. 2003 ஆந்திகதி எங்கள் வகுப்பு மாணவர்கள் தெகிவளை மிருகக் காட்சிச்சாலையைப் பார்க்கச் செல்லவிருக்கின்றார்கள். எமது வகுப்பாசிரியர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார். நானும் செல்வதாக இருந்தால், இருநூற்று ஐம்பது ரூபா கொடுக்க வேண்டும். எனவே, தயவுசெய்து எனக்கு இருநூற்று ஐம்பது ரூபா அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் மகன்
க. சிவசங்கர்.


1. இந்தக் கடிதத்தை எழுதியவர் யார்?
..........................................................
2. யாருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது?
..........................................................
3. எதற்காக கடிதம் எழுதப்பட்டுள்ளது?
..........................................................
4. 16 ஆம் திகதி எங்கு செல்லவிருப்பதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
..........................................................
5. எவ்வளவு பணம் தேவை எனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
..........................................................

✳ பழக்கடையொன்றில் நாளொன்றில் விற்கப்பட்ட பழங்களின் விபரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவ்விபரங்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.


| பழம் | பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மாம்பழம் | 28 |
| பப்பாசி | 35 |
| தோடம்பழம் | 19 |
| கொய்யாப்பழம் | 54 |
| விளாம்பழம் | 32 |

1. மிகக் கூடுதலாக விற்கப்பட்ட பழம் எது? (.............)
2. மிகக் குறைவாக விற்கப்பட்ட பழம் எது? (.............)
3. தோடம்பழத்தைவிட எத்தனை கொய்யாப்பழங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன? (.............)
4. பப்பாசிப்பழங்களைவிட எத்தனை கொய்யாப்பழங்கள் குறைவாக விற்பனை செய்யப்பட்டன. (.............)
5. விற்பனை செய்யப்பட்ட மாம்பழம், தோடம்பழம், விளாம்பழம் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை யாது (.............)
6. பழக்கடையில் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது? (.............)
7. விற்பனை செய்யப்பட்ட கொய்யாப்பழங்களினதும், விளாம்பழங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது? (.............)


✳ பின்வரும் உருக்களின் சுற்றளவுகளைக் காண்க.

1.



இவ்வுருவின் சுற்றளவு யாது? (.............)

2.



இவ்வுருவின் சுற்றளவு யாது? (.............)

3.



இவ்வுருவின் சுற்றளவு யாது? (.............)

✳ பின்வரும் பிரசினங்களுக்குத் தீர்வு காணுங்கள்

1. ஒன்றின் நீளம் 18 மீற்றர் ஆகவுள்ள 4 கயிற்றுத் துண்டங்களின் நீளம் யாது? (.............)
2. ஒவ்வொன்றும் 5 மீற்றர் நீளமுள்ள 11 கம்பித் துண்டங்கள் ஒன்றோடொன்று ஒட்டப்பட்டுள்ளன. அவற்றின் மொத்த நீளம் யாது? (.............)
3. 969 தோடம்பழங்கள் 3 பெட்டிகளில் சமனாக இடப்பட்டன எனின், ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? (.............)
4. பெட்டியொன்றில் 437 கொய்யாப்பழங்கள் உள்ளன. அவை சமனாக மூன்று பெட்டிகளில் அடுக்கப்பட்டன எனின், பெட்டியொன்றில் உள்ள கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது? எஞ்சிய கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது? (.............) (.............)
5. இரு பூசனிக்காய்களின் நிறைகள் 5 kg 350 g ஆகும். அவற்றுள் ஒன்றின் நிறை 2 kg 750 g ஆகும் எனின், மற்றைய பூசனிக்காயின் நிறை யாது? (.............)
6. தோட்டமொன்றிலிருந்து முதல் நாள் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை 438 ஆகும். இரண்டாம் நாளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை 387 ஆகும். மூன்றாம் நாளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை 608 ஆகும். மூன்று நாட்களிலும் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது? (.............)
7. ஒரு பிள்ளைக்கு 6 எள்ளுருண்டைகள் வீதம், 39 பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்கு எத்தனை எள்ளுருண்டைகள் தேவை? (.............)

✳ நான் மாந்தோப்புக்குச் சென்றபோது அங்கே......... என்ற தலைப்பில் 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1. ..........................................................
2. ..........................................................
3. ..........................................................
4. ..........................................................
5. ..........................................................
6. ..........................................................

(தொடரும்)

என்.எஸ்.உதயசந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.




# கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை

## பொருளியல்


உற்பத்திச் சாத்திய வரிப்படத்தைப் பயன்படுத்திப் பொருளாதார விளைவைச் சுருக்கமாகத் தருக.

(1) வரட்சி ஒன்றின் விளைவாக விவசாய உற்பத்தி வீழ்ச்சி.





✷ வரட்சியின் விளைவை உற்பத்தி மட்டம் வீழ்ச்சியடையும் போது, உற்பத்திச் சாத்திய வளையி கோடு மாறாது. இடது புறமாக உள்ள யாதாயினும் ஒரு இடத்தில் உற்பத்தி மட்டம் குறைத்துக் காட்டப்படும். இங்கு மற்றைய பொருளின் உற்பத்தி மாறாதிருக்கும்.

(2) சக்தி நெருக்கடியால் நாளாந்த மின்சார வழங்கல் குறைக்கப்படல்.





✷ இரு பண்டங்களின் வெளியீடு குறைவடைவதைக் காட்டும். எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு வளங்களின் பற்றாக்குறைநிலை காணப்படும். வளையிக்கு இடது புறமாக அமைந்துள்ள புள்ளி B காட்டுகிறது. ஆனால் உற்பத்திச் சாத்திய வளையி இடம்பெயரமாட்டாது.

(3) போரின் விளைவாக உட்கட்டமைப்பு வசதி சீர்குலைதல்.





✷ போரின் விளைவாகப் பொருளாதார உட்கட்டமைப்பில் பெருமளவு சேதம் ஏற்படலாம். இது மூலதனத்தில் அதிக இழப்பு ஏற்படும். இதனால் உற்பத்தி வீழ்ச்சியடைய, உற்பத்திச் சாத்திய வளையி இடதுபுறம் நகர்வடையும்.

(4) அரச முயற்சிகள் தனியார் மயப்படுத்தலின் விளைவாக வெளியீடு அதிகரித்தமை.





✷ அரசமுயற்சிகளைத் தனியார் மயப்படுத்தலினால் வெளியீடு அதிகரிக்கும். இதன் காரணமாக உற்பத்திச் சாத்திய வளையியை நோக்கி நகரும். உற்பத்திச் சாத்திய வளையிக்கு இடதுபுறத்திலிருந்து வளையியை நோக்கிச் செல்வதை அம்புக்குறி காட்டுகிறது.

(5) இரு கைத்தொழில்களிலும் தொழிலாளர்களுக்கான தேர்ச்சித் திறனை விருத்திசெய்யும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.





✷ தேர்ச்சியின் காரணமாக இரு தொழிலிலும் உற்பத்தி மட்டம் அதிகரிக்கும். இதன் காரணமாக எல்லை வளையி வலதுபுறம் நகரும்.

(6) 1990 - 1999 ஆகிய 10 வருடங்களில் பொருளாதாரம் ஒன்று 50 வீத வளர்ச்சி அடைந்துள்ளது.




✷ உற்பத்திச் சாத்திய வளையி ஒவ்வொரு புள்ளியிலுமிருந்து 50% வலது புறம் நோக்கி நகர்வடையும்.
வரைபடத்தில் X பொருளில் 100 இலிருந்து 150 ஆகவும் (150/100 X 100) Y பொருளில் 200 இலிருந்து 300 ஆகவும் (150/100 X 200) அதிகரித்துள்ளது.


(7) பொருளாதாரம் ஒன்று அதன் உற்பத்தி இயலளவிற்கு அப்பால் இருக்கின்ற ஒரு தொகைப் பொருட்களைச் சர்வதேசச் சந்தைப் பரிவர்த்தனை ஊடாக நுகரமுடியும்.




✷ வரைபடத்தின்படி Y பண்டத்தின் DE அளவினை ஏற்றுமதி செய்வதன் மூலம் X பண்டத்தின் CD அளவினை இறக்குமதி செய்யலாம். இது உள்நாட்டுப் பரிமாற்றமாகிய DF அளவைவிட FC அளவு அதிகமாகக் காணப்படுகிறது.


எனவே, சர்வதேசச் சந்தையிலான பரிவர்த்தனை ஊடாக உற்பத்திச் சாத்திய வளையிக்கு வெளியே இருக்கும் புள்ளியில் நுகர்வு மேற்கொள்ளலாம்.

(8) சந்தர்ப்பச் செலவு உயர்வடைந்த பின் உறுதியாக இருப்பின் அதன்பின் உற்பத்திச் சாத்திய வளையி நேர்கோடாக அமையும்.





வரைபடத்தில் A இலிருந்து B வரை சந்தர்ப்பச்செலவு உயர்வடைந்து, பின் அந்நிலைமை உறுதியாக இருப்பதை நேர்கோடு காட்டுகிறது.

(9) X பொருளில் புதிய தொழில்நுட்பம் புகுத்தப்படல்.





✷ X பொருளில் புதிய தொழில்நுட்பம் புகுத்தப்பட்டமையால் Y பொருள் மாறாதிருக்க X பொருளில் உற்பத்தி அதிகரிக்கும். இதனால் X பொருளில் உற்பத்திச் சாத்திய வளையி X1→X2 வலதுபுறம் நகர்வடைந்துள்ளது.

(10) பொருளாதாரத்தினுள் கூடுதலான வெளிநாட்டின் முதலீட்டின் வருகை.




✷ பொருளாதாரத்தினுள் கூடுதலான வெளிநாட்டு முதலீடு அதிகரித்ததன் விளைவாக மொத்த முதலீடு அதிகரிக்கும். இதனால் உற்பத்திச் சாத்திய வளையி ab என்ற கோடு pq ஆக வலதுபுறம் நகர்வடைந்துள்ளதைக் காணலாம்.


(11) Y தொழிலில் வேலையாட்கள் பயிற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏற்படும் ஊழிய வினைத்திறன் அதிகரித்தல்.




✷ இதனால் உற்பத்திச் சாத்திய வளையி A புள்ளியிலிருந்து B புள்ளியாக வலதுபுறம் நகர்வடைந்துள்ளது.

(12) உள்நாட்டுப் போரின் விளைவாகப் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் சேதம்.
*வினா 3 ஐப் பார்க்கவும்.*

(13) பொருளாதார மந்தநிலையினால் தேசிய வெளியீட்டில் ஏற்படும் வீழ்ச்சி.





✷ பொருளாதார மந்தநிலையினால் தேசிய வெளியீட்டில் வீழ்ச்சி ஏற்படும். எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படும். இது வளையியின் இடதுபுறத்தில் அமைந்த புள்ளி A குறிக்கிறது.

(14) X, Y ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரம் ஒன்றில் உற்பத்திச்சாத்தியவளையி முழுவதுமாக வெளியே வலதுபுறமாக அசைவுறுவதனை ஏற்படுத்தும் காரணியை இனங்காண்க.

1. 6 சதவீதமான பொருளாதார வளர்ச்சி.
2. X இன் உற்பத்தியில் புதிய தொழில்நுட்பம்.
3. மொத்தப் பொருளாதாரத்தின் காரணி உற்பத்தித்திறன் அதிகரித்தல்.
4. நிறைதொழில்மட்டத்தை அடைதல்.
5. Y தொடர்பாக நுகர்வோன் விருப்பம் அதிகரித்து, அதனுடைய உற்பத்தியில் ஏற்றத்தினைக் கொண்டுவருதல்.

(15) பாதுகாப்பு நடவடிக்கைக்காகப் பயன்படுத்தும் வளம் அதிகரித்தல்.




✷ உற்பத்திச் சாத்திய வளையின் A என்ற புள்ளியிலிருந்து பாதுகாப்புத்துறைக்கு நிலம் ஒதுக்கப்பட்டதால் B புள்ளிக்கு அதிகரித்தல்.

வினா 01)

பின்வருவனவற்றில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

1. ஒவ்வொரு பொருளாதாரமும் வேறுபட்ட அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக, வெவ்வேறு வகைப் பொளாதாரம் ஒழுங்கமைப்புத் தோன்றுகிறது.
2. மூலத்திற்குக் குழிவாக அமைந்த உற்பத்திச் சாத்திய வளையி அதிகரிக்கும். அமையச்செலவைக் குறிக்கும்.
3. பொருளியல் அருமை என்பது பற்றாக்குறையாக இருக்கின்ற வளத்தைக் குறிக்கும்.
4. ஆக்க இயல்தகவு எல்லையின் நகர்வின் மூலம் வள ஒதுக்கீட்டில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டலாம்.

விடை: (2)

வினா 02

பின்வரும் கூற்றுக்களிலுள்ள இடைவெளியை நிரப்புக.

(I) வெளியீடு ஒன்றிற்கான உள்ளீட்டையும், அதற்குரிய செலவையும் இழிவுபடுத்துவதன் மூலம் உச்ச வெளியீட்டைப் பெறும் செயற்பாடு.................. ஆகும்.

(II) ஒரு நாட்டின் குடித்தனத்துறையினருக்கிடையில் அதிகளவான வருமான ஏற்றத்தாழ்வுநிலை காணப்படாதிருத்தல் ........................ எனப்படும்.

விடை (I) உற்பத்தியின் வினைத்திறன்.
(II) சமூக நீதி, நியாயத்துவம்.

வினா 03

போட்டிச்சந்தையின் குறித்த பொருள் தொடர்பான மிகைக் கேள்விச் சமன்பாடு பின்வருமாறு தரப்படுகின்றன.


P = 4 - (QD-QS)
P = 0.1 Q-4

சமநிலை விலை, சமநிலைத் தொகை ஆகியவற்றைக் காண்க.

விடை: சமநிலை விலை - 4 ரூபா
சமநிலை தொகை - 80 அலகுகள்.

வினா 04

தொழிற்சாலைப் பிரச்சினை காரணமாகச் சில தொழிற்சாலை மூடப்பட்டன என்பதைக் காட்டும் உற்பத்திச்சாத்திய வளையி.




விடை (2)

சி.சிவசெந்தூரன்

(தொடரும்)

# உலகத்தை அதிரவைக்கும் சோதிடப் புரட்டுக்கள்

**கனடாவிலிருந்து நக்கீரன்**

உலகக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டப் போட்டியில் இந்தமுறை இந்தியாதான் வெற்றிவாகைசூடும் என ஆருடம் சொன்ன அத்தனை பிரபல சோதிடர்களும் மண்ணைக் கவ்வினார்கள்.



திறமையைச் சொல்லுங்கள்! நீங்கள் வெல்வீர்கள்!!

பத்திரிகைக்காரர்கள், 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த “பிரபல சோதிடர்” நொஸ்ரடாமைக்கூட விட்டு வைக்கவில்லை. அவர் சூசகமாக உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றும் எனக் கணித்துள்ளார் என்று “கரடி” விட்டார்கள். அந்தச் செய்திக்குக் கொடுத்த தலைப்பு “கோப்பை இந்திய அணிக்கு, நொஸ்ரடாம் கணிப்பு”

“ஒரு இளவரசர் (கோல்கட்டா இளவரசர் கங்குலி) ஆபிரிக்காவில் நடக்கும் ஒரு போரில் (உலகக்கிண்ணப்போட்டி) ஓர் இளையவருடன் (சச்சின் அல்லது ஷே வாக்) இணைந்து அந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்று மகிழ்ச்சி அடைவார்.”

யார் இந்த நொஸ்ரடாம்? நியூட்டனை, மார்க்கோனியை, ஐன்ஸ்டீனைத் தெரியாதவர்கள்கூட இந்த நொஸ்ரடாமை அறிந்து வைத்திருக்கிறார்கள்.

நொஸ்ரடாம் யூத இனத்தவர். தென்பிரான்ஸ் நாட்டின் **Saint Remi?** என்ற மாகாணத்தில் பிறந்தவர் (1503-1566). அவரது இயற்பெயர் **Michel de Nostredame** என்பதாகும். அதனை இலத்தீன் மொழியில் **"Nostradamus"** என அவர் மாற்றி வைத்துக் கொண்டார்.

**Inquisition** என்ற சமயத் தண்டனைக்குப் பயந்து, கத்தோலிக்க மதத்துக்கு அவரது குடும்பம் மாறியது. சிறுவயதிலேயே தனது பாட்டனாரிடம் இருந்து கணக்கியல், வானவியல், சோதிடம் பற்றிக் கேட்டறிந்து கொண்டார். பின்னர் மருத்துவராகப் படித்துப் பட்டம் பெற்று, 1525 இல் தொழில் செய்ய ஆரம்பித்தார். அப்போது தென்பிரான்சில் இடம்பெற்ற கொள்ளைநோய்க்கு **(Plague)** ஆளான நோயாளிகளுக்கு மருத்துவம் செய்தார். புதுமையான முறையில் மருத்துவம் செய்து பலரைக் குணப்படுத்தியதால், அவர் ஒரு கைதேர்ந்த மருத்துவர் எனப் போற்றப்பட்டார். இதனால், அவரது பெயர் பிரபல்யமானது.

தனது ஆருடத்தை நான்கு வரிகள்கொண்ட கவிதை வடிவில் **(quatrains)** எதுகையோடு எழுதினார். அப்படிப் பத்து, நூறு கவிதைகளை எழுதினார். அதற்கு அவர் வைத்த பெயர் **Centuries.** இந்தச் சொல்லுக்குப் பொருள் நூற்றாண்டு அல்ல. வெறுமனே நூறு கவிதைகள் என்று பொருள்.

அவர் கையாண்ட நடை பூடகமாக இருந்தது. வேண்டும் என்றே இலத்தீன், கிரேக்க, இத்தாலி மொழிச்சொற்களைப் புகுத்தி எழுதினார். சொற்களின் எழுத்துக்களை மாற்றியும் எழுதினார். தன்னை ஒரு சூனியக்காரன் அல்லது மந்திரவாதி என்று மற்றவர்கள் கணிக்கக் கூடாதென்பதற்காகவே அப்படிச் செய்ததாகச் சொல்லுகிறார்கள்.

இந்த நூலில் 16 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து உலகம் முடியும் மட்டும் நடைபெறப் போகிற நிகழ்ச்சிகளை ஆருடம் கூறினார். உலகம் கி.பி. 3797 ஆம் ஆண்டு முடிவடைந்து விடும் என்பது அவரது ஆருடம்.

எல்லாவற்றையும் பூடகமாக எழுதி வைத்ததால், அவருக்குப் பின் வந்தவர்கள் அவற்றைத் தங்கள் தங்கள் வசதிக்கேற்ப திரித்துப் பொருள் கொண்டார்கள். எடுத்துக்காட்டாக- **Hisler** என்ற சொல்லை பின்வந்தவர்கள் **Hilter** எனப் பொருள் கொண்டார்கள். **Black** என்ற சொல் முசோலினியைக் குறிப்பதாகப் பொருள் கொண்டார்கள். இப்படி நொஸ்ரடாம் எழுதியவற்றைத் தங்கள் வசதிக்கேற்ற வாறு கசக்கி, திரித்து, வளைத்துப் பொருள் கொண்டார்கள்.

செப்ரெம்பர் 11 (2001) ஆம் நாள் நியூயோர்க் நகரிலுள்ள வணிகக் கோபுரங்கள் தாக்கி அழிக்கப்பட்டதல்லவா? அதுபற்றி நொஸ்ரடாம் ஆருடம் கூறியிருக்கிறாரா? என்பதை அறிய எல்லோரும் அவர் எழுதிய **Centuries** நூலைப் புரட்டினார்கள். என்ன வியப்பு? அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

**Century 6, Quatrain 97**

Two steel birds will fall from the sky on the Metropolis
The sky will burn at forty-five degrees latitude
Fire approaches the great new city
Immediately a huge, scattered flame leaps up
Within months, rivers will flow with blood
The undead will roam earth for little time.

\- 1654

இரண்டு எஃகுப் பறவைகள் வானத்திலிருந்து தலைநகர் மீது விழும். வானம் நாற்பத்தைந்து பாகை உயரத்தில் எரியும். தீ அந்தப் பெருநகரத்தை அண்மிக்கும் உடனே சிதறுண்ட பெரிய தீச்சுவாலை மேலே பாய்ந்தெழும். சில மாதங்களுக்குள் ஆறுகளில் குருதி ஓடும். மரிக்காத மனிதர்கள் சொற்ப காலம் உலகில் அலைந்து திரிவார்கள்.

மூக்கில் விரலை வைக்கிறீர்களா? நொஸ்ரடாம் எவ்வளவு பெரிய சோதிட சிகாமணி, சோதிட ஞானி, சோதிட விற்பன்னர் என மலைக்கிறீர்களா? செப்ரெம்பர் 11 ஐ எவ்வளவு துல்லியமாக ஆருடம் சொல்லியிருக்கிறார் என்று திகைக்கிறீர்களா?

கொஞ்சம் பொறுங்கள். இது ஒரு இடைச்செருகல். யாரோ ஒரு குறும்புக்காரன் தொடர்வலையத்தில் இதனை எழுதிவிட்டார். நொஸ்ரடாம் எழுதிய ஆருடங்களில் காணப்பட்ட வரிகளைத் திருடி, இந்தப் பாடலைப் புனைந்துவிட்டான்.

நொஸ்ரடாம் இரண்டு எஃகுப் பறவைகளைப்பற்றி எங்குமே குறிப்பிடவில்லை. அது முற்று முழுதான இடைச்செருகல். வெறும் கற்பனை.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். நொஸ்ரடாமின் ஆருடங்கள் நான்கு வரி கொண்ட கவிதை. இதில் ஆறு வரிகள் காணப்படுகிறது. அதுமட்டுமல்ல, இது எழுதப்பட்டது 1654 என்ற குறிப்பு வேறு போடப்பட்டது. ஆனால், நொஸ்ரடாம் 1566 இல் இறந்துபோனார்.

இன்றும் இந்த ஆசாமியின் பெயரை வைத்துப் பலர் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவரைப் பற்றி எழுதுகிற நூல்கள் லட்சக்கணக்கில் விற்பனையாகின்றன.

உலகக் கிண்ணப்போட்டி பற்றி உள்ளூர் பிரபல சோதிடர் ஒருவர் முந்திரிக்கொட்டை போல எல்லோரையும் முந்திக் கொண்டு ஒரு வித்தியாசமான முடிவைச் சொன்னார்.

இறுதி ஆட்டத்தில் சிறிலங்காவும், கென்யாவும் மோதிக்கொள்ளும் என்றும், அதில் கென்யா அணி வெற்றிபெறும் என்று கிரகங்களது நிலையைத் துல்லியமாகக் கணித்துச் சொல்லியிருந்தார்.



சோதிடத்தின்படி நடக்காத தோல்வி - நடக்கும் என்பார் நடக்கவில்லை.

இந்தச் செய்தியை வேலை மெனக்கிட்டுத் தமிழ்த் தொலைக்காட்சியில் உலகக் கிண்ணப் போட்டிகள் பற்றி ஆய்வுசெய்த ஒரு ஆய்வாளர் சொன்னார். யார் அந்தப் பிரபல சோதிடர் என்பதை மட்டும் அவர் சொல்லவில்லை.

இந்திய அணி இந்தமுறை உலகக் கோப்பைக்குப் புறப்படும் முன்னரே நாடு முழுதும் யாகம், பூசை, ஹோமம், சாந்தி, அர்ச்சனை, சிறப்பு அபிஷேகங்கள் என்று அமளிப்பட்டது. இந்திய அணியின் வெற்றிக்காகக் குக்கிராமம் முதல் பேரூர்வரை வேற்றுமை இல்லாமல் கோயில்களில் சிறப்புப் பூசைகள் இடம்பெற்றன. 108 குடங்களில் பால் அபிஷேகம் எல்லாம் வல்ல பிள்ளையாருக்குச் செய்யப்பட்டது. சிலர் திருப்பதிக்கு மொட்டை போடுவதாக நேர்த்தி வைத்தார்கள். இவற்றால் கோயில்களுக்கும் நல்ல வருமானம். அர்ச்சகர்கள் காட்டிலும் நல்ல மழை.

“இன்னின்ன காரணங்களால் இந்தியாவுக்குத்தான் வெற்றி” என்று எல்லாச் சோதிடர்களும் கணிப்புச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

“சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியில் சனி ஓரை நடக்கிறது.... எனவே, முதலில் துடுப்பெடுத்து ஆடும் அணி வெற்றிபெறும்.....” இப்படியும் ஒரு ஆருடம்.

ஒரு சோதிடர் துடுப்பாட்டம் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டிக்கு நேர் எதிரில் குருபகவான் படத்தை வைத்து பூசைசெய்து கொண்டிருந்தார். இந்திய அணிக்குக் குருபகவான் அருளாசி வழங்குவார் என்று அவர் நம்பியது தான் அதற்குக் காரணம். போட்டி முடியும்வரை குருபகவான் படத்துக்கும், தொலைக்காட்சிப் பெட்டிக்கும் இடையில் யாரையும் குறுக்கே நடக்கக்கூடவிடவில்லை. காரணம் சக்தி தடைபட்டுவிடுமாம்.

ஆனால், இந்தியா-அவுஸ்திரேலியா இரண்டுக்கும் இடையிலான இறுதிப்போட்டியில், இந்திய அணி வெல்லும் என்ற சோதிடம் பிழைத்துவிட்டது. யாகங்கள், பூசைகள், அர்ச்சனைகள், அபிஷேகங்களால் கிரகங்களையோ, கடவுளரையோ விலைக்கு வாங்க முடியவில்லை.

துடுப்பாட்டம் போன்ற விளையாட்டில் திறமையான அணி வெற்றி பெறும் என்பது பொதுவிதி. பத்தில் ஒன்பதுமுறை திறமையான அணியே வெல்லும் சாத்தியம் உண்டு. பத்தில் ஒருமுறை விதிவிலக்காகத் திறமையான அணி தோற்கக்கூடும்.

இந்திய - அவுஸ்திரேலியா இறுதிப்போட்டியில், அவுஸ்திரேலிய அணிக்கே வெல்லும் வாய்ப்பு இருந்தது. காரணம் - அது ஆடிய ஆட்டங்கள் அத்தனையிலும் வெற்றி பெற்றிருந்தது. அதாவது, தொடர்ந்து 16 ஆட்டங்களில் வெற்றி பெற்று வந்திருக்கிறது. இறுதி ஆட்டத்தில் அது தோற்றிருந்தால் அது விதிவிலக்கு. அதாவது பத்தில் ஒன்று.

எடுத்துக்காட்டாக - நமீபியா இந்த முறைதான் முதன்முதலில் உலகக் கிண்ணத்துக்கான போட்டியில் கலந்துகொண்டது. அது ஆடிய எல்லா ஆட்டங்களிலும் தோல்வியைத் தழுவியது. அதற்கு முக்கிய காரணம் - திறமை பட்டறிவு இன்மை. இதனை எந்தக் குருபகவானோ அல்லது அசல் பகவானோ மாற்றி எழுத முடியாது.

இன்னொரு சோதிடர், அமெரிக்க - ஈராக் சண்டை தொடங்கி இரண்டாம் நாள் சண்டை நின்றுவிடும் என்று கணித்துச் சொன்னார். வழக்கம்போல் அது பிழைத்துவிட்டது. இதை எழுதும்போது 15 நாட்களாக யுத்தம் தொடர்கிறது.

சென்னையில் வசிக்கும் ஆர்.கே. பகவதிராஜ் என்ற வாஸ்து நிபுணர் ரெலிப்பதி அதிர்வுகளைக்கொண்டு துடுப்பாட்டம் உட்பட யாருடைய வெற்றி, தோல்வியையும் துல்லியமாகக் கணிக்கமுடியும் என்று ஒரு புதுக்கரடியை அவிட்டு விட்டிருக்கிறார். ✷

## தொழில் வழி காட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் பாடசாலை மாணவர்களிற்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கொன்று நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கு நாளை மறுநாள் யாழ்.மத்திய கல்லூரியில் காலை 9 மணிக்கு இடம்பெறும். 150 மாணவர்கள் கலந்துகொள்ளும் இக்கருத்தரங்கில் பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற மாணவர்களிற்கு - தொழில் பற்றிய அக்கறை உணர்வையும் அவை பற்றிய தெளிவான விளக்கங்களையும் வழங்குவதற்காக நடைபெறவுள்ளது.

இளைஞர் வழிகாட்டல் பிரிவு நடாத்தும் இக்கருத்தரங்கிற்கு ஜி.ரி.இசற், கைத்தொழில் பயிலுநர் சபை ஆதரவு வழங்குகின்றன. (ரா)

## கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்தார்

(யாழ்ப்பாணம்)

கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் சுன்னாகம் வாசி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகப் பகுதியில் விற்பனை நிலையமொன்றில் ஏற்பட்ட கைகலப்பில் வேலையா ரகு (வயது 27) என்றும் இளைஞன் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுபோதையிலே இருந்த ஒருவர் வலிந்து வந்து தன்னுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் இதனால் கோபமடைந்த தான் அவரைத் தாக்க முற்பட்டவேளையிலே அவரது கத்திக்குத்துக்கு இலக்கானதாக காயமுற்றவர் தெரிவித்தார். (சு)

## இயக்குநர் சபைக் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சியாளர் சம்மேளனத்திற்கான தலைவரைத் தெரிவு செய்வதற்கான இயக்குநர் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதற்கு கூட்டம் கூடுவதற்கான அடிப்படைக்கோரம் இல்லாமையே காரணம் எனத் தெரிய வருகின்றது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி சம்மேளனத்தில் நடைபெற்ற கூட்டத்தில்,

சம்மேளனத்திற்கான இயக்குநர்களாக சி.குமாரவேல், சி.வி.கே. சிவஞானம், கு.கந்தசாமி, மா.செல்வராஜா, வ.கனகலிங்கம், சி.சிவமகாராஜா, ம.சிவசுப்பிரமணியம். ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)



# புதுவருட



## அசத்தலான தள்ளுபடி!

- ☆ புதுவருட விலைக் கழிவுகள்
- ☆ புதுவருட சலுகைகள்
- ☆ ஒன்றை வாங்கி மற்றொன்று இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
- ☆ புதுவருடத்தில் பொன்னான வாய்ப்புக்களைத் தவறவிடாதீர்கள்

**விரையுங்கள்! இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!**

நியாய விலையில்
தரமான பொருட்கள் ஒரே கூரையின்கீழ்!
யாழ். நகரில் 1 ஆவதாக முற்றிலும்
நவீனமயப்படுத்தப்பட்ட

## Annai Nagaa Food City



பண்டிகை தினசரி தேவைகளுக்கு
எங்களிடமிருந்து
பெற்றுக்கொள்ளுங்கள்

- ✪ காய்கறி வகைகள்
- ✪ மீன்/இறைச்சி வகைகள்
- ✪ ஐஸ்கிறீம் வகைகள்
- ✪ பழப்பானங்கள்
- ✪ சிகை அலங்காரப் பொருட்கள்
- ✪ மளிகை பொருட்கள்
- ✪ வீட்டுப்பாவனை பொருட்கள்
- ✪ தங்க நகைகள்
- ✪ மருந்து வகைகள்

*மேலும் பல ....*

175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: (021) 2225515, (021) 2225223

(சி-771)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## இரு நாடுகளுக்கான செய்தி !

இலங்கையில் செல்வாக்குச் செலுத்த முனையும் இரண்டு முக்கிய நாடுகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தெளிவான நிலைப்பாட்டை, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக் கின்றார்.

அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் எவ்வாறான அணுகுமுறையைக் கொண்டிருக் கின்றன என்பதிலிருந்து, அவை செல்வாக்குச் செலுத்த விரும்புவதன் பின்னணி, பிராந்திய அரசியலில் இந்நாடுகளின் ஆர்வம் முதலாக - விடுதலைப் புலிகளுடன் இந்த இரு நாடுகளும் உறவைப் பேணவேண்டியதன் முக்கியத்துவம் வரை - கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெளிவாக்கியிருக் கிறார்.

சர்வதேச அரசியலில், மிகவும் திறமையான இராஜதந்திர நகர்வுகளுடன் விடுதலைப் புலிகள் செயற்பட்டு வருவதையும்- சர்வதேச அரசியலின் செல்நெறிக்கு ஏற்பச் செயற்பட்டு - தமிழ்மக்களுக்குரிய நீதியான, கௌரவமான, தன்னாட்சி உரிமை கொண்ட தீர்வினைப் பெறுவதற்கு விடுதலைப் புலிகள் உறுதியுடன் இருப்பதையும் - பாலசிங்கத்தின் பேச்சு எடுத்துக் காட்டியிருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினையானது சர்வதேச மயப் படுத்தப்பட்டதன் பின்னர் - விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் - அவர்களது அரசியல் முதிர்ச்சியையும், சர்வதேச அரசியலூடாக அவர்கள் நகர்வதையும் தொடர்ச்சியாகவே அவதானிக்க முடிகின்றது.

இந்தவகையில் - விடுதலைப் புலிகள் அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் விடுத்திருக்கும் செய்திகள் மிக முக்கியமானவையாகின்றன.

இந்தியாவுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான உறவுநிலையைப் பொறுத்த வரையில் - இந்தியா இன்னும் பகையுணர்வுடனேயே இருப்பதை சுட்டிக்காட்டிய அன்ரன் பாலசிங்கம் -

இந்தியா தற்போது எவ்வாறான தவறான போக்கைக் கடைப்பிடிக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

'பிரச்சினையில் இந்தியா தலையிட்டு - எமது மக்களுக்கு நீதி நிலைநாட்டிக் கொடுக்க வேண்டுமென்றால் விடுதலைப் புலிகளுடனும், புலிகளின் தலைமைப்பீடத்துடனும் ஒரு நல்லுறவைப் பேண முயற்சிக்க வேண்டும். அப்படி முயற்சிக்காமல்- ஆனந்தசங்கரியைத் தனியாகக் கூப்பிட்டுக் கதைப்பதோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவை ரகசியமாகக் கூப்பிட்டுக் கதைப்பதோ இந்தப்பிரச்சினைக்கு முடிவைக் கொடுக்காது என்பதை எடுத்துக்கூறிய பாலசிங்கம் -

'நாங்கள் இந்தியாவை ஒரு நேசசக்தியாகத்தான் பார்க் கின்றோம். பழைய நிகழ்வுகள், பகைமையுணர்வுகள், யுத்தங்களை மறந்து இந்தியா எமது மக்களின் நலனுக்காக விடுதலைப் புலிகளுடன் நட்புறவை வளர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் அவர்களும் பங்குகொண்டு ஒரு நியாயமான தீர்வைத்தரவேண்டும் என்பதுதான் எங்களது நோக்கம்' - என்ற செய்தியை இந்தியாவுக்குச் சொல்லியிருக்கிறார்.

சமாதான முயற்சிகளில் ஒதுங்கியிருப்பதாகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்கையே பிரதானப்படுத்துவதாகவும் தனது நிலைப்பாட்டை அமைத்துக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து விடுக்கப்பட்டுள்ள இச்செய்தி - எந்த வகையில் உள்வாங்கப்படும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாகவும், வலுமிகுந்த சக்தியாகவும் திகழும் விடுதலைப் புலிகளின் இந்த அழைப்பை - இந்தியா எப்படிக் கையாளப்போகின்றது என்பதே, இலங்கை விவகாரத்தில் அதனது எதிர்காலச் செயற்பாடுகளுக்கு கட்டியம் கூறுவதாக அமையும்.

அதேவேளை - அமெரிக்கா பற்றிய விடுதலைப் புலிகளின் கருத்துக்களும் மிக முக்கியமானவையாக உள்ளன.

சர்வதேச அரங்கில் அமெரிக்கா ஒரு வல்லரசாகத் திகழ்ந்தாலும் - இலங்கைப் பிரச்சினையில் அதனது செயற்பாடுகள் தவறான அல்லது இன்னமும் மாற்றமடையாத நிலையிலிருப்பதை விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியிருக் கின்றனர்.

குறிப்பாக - ஜப்பானில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக, வொஷிங்ரனில் கூட்டப்படுகின்ற மாநாட்டுக்கு - விடுதலைப் புலிகள் அழைக்கப்படாதது- அமெரிக்கா விடுதலைப் புலிகளை இன்னமும் எப்படித் தவறாக நோக்குகின்றது என்பதையே எடுத்துக் காட்டுவதாக அன்ரன் பாலசிங்கம் கூறுகிறார்.

அமெரிக்காவின் வரைவிலக்கணத்தின்படி உருவாக்கப்பட்ட வன்முறை மற்றும் பயங்கரவாதச் சொற்களுக்கும் - விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கும் இடையிலான வேறுபாடு - இன்னமும் அமெரிக்கர்களால் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதை அன்ரன் பாலசிங்கத்தின் பேச்சும் உறுதிப்படுத்துகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கும் அமெரிக்கா - விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பில்லாது அதனை எவ்வகையிலும் ஈட்டிக்கொள்ள முடியாது என்பதுடன் - விடுதலைப் புலிகள் இல்லாத சமாதானம் இலங்கையில் இல்லை என்பதையும் அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தியிருக்கிறார்.

சமாதான வழிமுறையில் பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும் விடுதலைப் புலிகள் மீதான அமெரிக்காவின் தடைக்கு இனிமேலும் அர்த்தம் இருக்கப்போவதில்லை என்பதை அவரது உரை- வொஷிங்ரனுக்கு குறிப்பிட்டிருக்கிறது.

# ஐ.நா. செயலாளராக பதவியேற்க தயாராவதாக ரிரோன் அறிவிப்பு!

ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த பொதுச்செயலாளராகப் பதவியேற்கத் தாம் தயாராகி வருவதாக வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இந்தப்பதவி ஒரு ஆசிய நாட்டவருக்கு முன்னரே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அத்தகைய வாய்ப்பு எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இப்பொழுது 2006 ஆம் ஆண்டில் இத்தகைய சந்தர்ப்பத்தைப்பெறும் வாய்ப்பை ஆசியநாடுகள் நழுவவிடக்கூடாது என்று அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ கூறினார்.

தற்பொழுது ஐ.நா.சபையைப் பலப்படுத்துவது அவசியமாகும். ஈராக் மீதான தாக்குதல் காரணமாக ஐ.நா.சபை பலவீனப்படுத்தப்பட்டுள்ளதாக உலகெங்கும் ஒரு அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரம் குறித்துக் கவனம் செலுத்தியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா.சபையைப் பலப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு தன்னைப் பணித்துள்ளதாகவும் அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

## புதிதாக வேட்புமனு கோரினால் எதிர்த்து நீதிமன்றில் வழக்கு!

### சித்தார்த்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஏற்கனவே கோரப்பட்ட வேட்பாளர் பட்டியலுக்குப் பதிலாகப் புதிதாக வேட்பாளர் பட்டியல் கோரப்பட்டால், இதற்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படும் என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபையில் ஏற்கனவே அழைக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலுக்குப் பதிலாகப் புதிதாக வேட்பாளர் பட்டியல் கோரப்படும் என்று அண்மையில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாகவே புளொட் தலைவர் சித்தார்த்தன் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

## வானொலி அனுமதி கிடைக்காததால் சிஹல உறுமய வழக்கு தாக்கல்

### திலக் கருணாரட்ண தகவல்

(கொழும்பு)

வானொலி சேவை ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் இதுவரை அனுமதி தராததால் அதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குச் சிஹல உறுமய நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன கருத்துத் தெரிவிக்கையில்- பிரித்தானியாவிலுள்ள சிஹல உறுமய கிளை- வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்டால் அதற்குரிய வானொலி உபகரணங்கள் வழங்குவதாகத் தெரிவித்துள்ளதாகவும் -

அவுஸ்திரேலியாவிலுள்ள சிஹல உறுமய உறுப்பினர்கள் வானொலி சேவைக்குரிய அலுவலக உபகரணங்கள் மற்றும் பிறபொருட்களும் வழங்கவுள்ளதாகவும் - அவர் தெரிவித்தார்.

## சீன ட்ரோலர் மீதான தாக்குதல் குறித்து விசாரிக்க கடற்படைத் தளபதிக்கு உத்தரவு

### ஜனாதிபதி சந்திரிகா பிறப்பித்தார்

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் கடந்த மாதம் 20 ஆம் திகதி சீன மீன்பிடிப்படகு தாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தி, இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கடற்படைத் தளபதியை ஜனாதிபதி பணித்துள்ளார்.

முல்லைத்தீவுச் சம்பவத்துக்கு- மூன்றாவது ஒரு சக்தியே காரணம் என்று கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளமை - ஒரு ஆயுதம் தாங்கிய குழுவைக் குற்றம் சாட்டுவதாக அமைகின்றது. இவ்வாறான விடயத்தைத் தவிர்ப்பதற்கு விசாரணை நடத்தவேண்டும் என்று அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் கூறியுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சந்தேகிப்பதற்குப் போதியளவு சாட்சியங்கள் உள்ளதாகக் கடற்படைத்தளபதிக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் கருத்துக் கணிப்பு இன்னமும் இறுதி முடிவில்லை!

### ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர் கருத்து

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் குறித்த மக்களின் கருத்தை அறிவதற்காகக் கருத்துக் கணிப்பு நடத்தப்படுவது பற்றி இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என ஐ.தே.க.வின் ஊடகப் பேச்சாளர் ஜெயந்த கருணதிலக தெரிவித்தார்.

கருத்துக் கணிப்பை எப்போது நடத்துவது என்பது பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால், இந்தக் கருத்துக் கணிப்பு- பேச்சுக்களை முன்கொண்டு செல்வதற்கு உதவும் என்றும், பேச்சுக்கள் சரியான பாதையில் செல்வதையும், இதற்கான மக்கள் ஆதரவையும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதானப் பேச்சு குறித்து கிராம மட்டத்தில் விபரிப்பு

(கொழும்பு)

கிராமமட்டத்தில், மக்களிடையே சமாதானப் பேச்சு வார்த்தைகள், பொருளாதார வளர்ச்சிபற்றிக் கலந்துரையாடும் நடவடிக்கையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஈடுபடவுள்ளது.

முதலில் மாத்தறை மாவட்டத்தில் ஆரம்பமாக இருக்கும் இக்கலந்துரையாடல்கள் மூன்று மாதத்துக்குள் இலங்கை முழுவதும் நடத்துவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முதலில் - மாத்தறையில் 7 தேர்தல் தொகுதிகளில், 3 நாட்கள் ஐக்கிய தேசிய முன்னணி அங்கத்தவர்களை அழைத்து நடத்தப்படும் முதல் கலந்துரையாடல் வெற்றியளிப்பின் - வடமத்திய மாகாணம், வடமேல் மாகாணம் போன்றவற்றில் விஸ்தரிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புலிகள்-கூட்டமைப்பு இவ்வாரம் சந்திப்பு!

### ஆனந்தசங்கரி கலந்துகொள்ளார்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், விடுதலைப் புலிகளின் உயர்மட்ட உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பு இவ்வாரம் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சியில் இடம்பெறும் எனினும், சந்திப்பிற்கான திகதி இன்னமும் உறுதியாகவில்லை எனவும் இரா.சம்பந்தன் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் இருதரப்பும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதே இந்தச் சந்திப்பின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் போன்ற விடயங்களும் இந்தச் சந்திப்பில் ஆராயப்படும் எனத் தெரிகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு- விடுதலைப் புலிகள் இயக்கச் சந்திப்பில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி கலந்துகொள்ளமாட்டார் எனவும், அவர் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா பயணமானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதான முயற்சிக்கு சுவீடன் ஆதரவு தரும்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கப் போவதாகச் சுவீடன் தெரிவித்துள்ளது.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் சுவீடன் பிரதிநிதிகள் உள்ளார்கள். அவர்கள் தொடர்ந்தும் இந்தக் குழுவில் இருப்பார்கள் என்று சுவீடன் வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஈவா வேல்ட் புரூப்பின் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகளை விஸ்தரிக்க உதவப்போவதாகவும் அவர் உறுதியளித்தார். இருதரப்பு அபிவிருத்தி ஒத்துழைப்புத் தொடர்பான உடன்படிக்கை நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது. அதன் புதிய அணுகுமுறை இலங்கையின் சமாதானம், ஜனநாயகம், மனித உரிமைகள், பொருளாதார அபிவிருத்தி ஊக்குவிப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டதாக அமைந்திருக்கப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வைத்தியர்களின் சிபார்சு இல்லாமல் மருந்துகளை மக்கள் பாவிக்கக்கூடாது!

**பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளையுடனான நேர்காணல் இது.**

***கேள்வி***: வைத்திய அதிகாரிகளின் சிபார்சு இன்றி நோயாளிகள் தனியார் மருத்துவ மருந்தகங்களில் மருந்துகளை வாங்கிப் பாவிப்பதால், பல தீமைகள் ஏற்படுகின்றன. பக்க விளைவுகளும் ஏற்படுகின்றன. இதையிட்டு நீங்கள் நோயாளிகளுக்கும், பொதுமக்களுக்கும் என்ன அறிவுரை கூற விரும்புகிறீர்கள்?

***பதில்***: எந்த மருந்தாயினும் சரி அதனைத் தனியார் மருந்தகங்கள் வைததியரின் சிபாசில்லாமல் விற்கக் கூடாது. ஆனால், அநேக மருந்தகங்களில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள் கிடையாது. ஒரு உதாரணம் கூறுவதாயின், சில மருந்தகங்களில் நாரிப்பிடிப்பு என்று ஒருவர் போய்க் கேட்டால், மூன்று வகையான வில்லைகளைக் கொடுத்து உதவுகிறார்கள். இந்த மூன்று வில்லைகளும் வெவ்வேறு நிறமுடையவை. சிவப்பு - **Brufen**, பச்சை - விற்றமின் **c-b** குளிகை, மஞ்சள் - **Sparine**, இவை கண்ணுக்கு விருந்து, நோயாளிக்கு மருந்து, பக்கவிளைவுகள் ஏற்பட்டபின் வைத்தியர்கள் திகைக்க நேரிடுகிறது.

பலசரக்குக் கடைகளில்கூட சில மருந்து வகைகளை- உதாரணமாக, பனடோல் வில்லைகளை இலகுவாக வாங்கலாம். எக்காரணங்கொண்டும் வைத்தியரின் சிபார்சு இல்லாமல் மருந்தகங்கள்- மருந்து வகைகளை விநியோகிக்கக்கூடாது. இதற்காகிய சட்டங்கள் உண்டு. இவற்றைப் பொதுமக்களோ, மருந்தகங்களோ பொருட்படுத்துவதில்லை. ஒரு மருந்தை வாங்கும்போது, அதன் காலாவதியாகும் எல்லையை அவதானத்தில் கொள்ளவேண்டும். அதே போன்று பால்மா, பிஸ்கற், சத்துணவு போன்றவற்றிற்கும் காலாவதியாகும் திகதிகளுண்டு. எமது பிராந்தியத்தில் சில வைத்தியசாலைகளில் பொதுமக்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் காலாவதியாகிய மருந்துகளைக் கொடுத்து அனுப்புகிறார்கள்.

***கேள்வி***: யாழ்ப்பாண மக்கள் அதிகளவில் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என வைத்திய வட்டாரங்கள் கூறுகின்றன. சூழல் மாசு இதற்குக் காரணமாக இருக்குமா? அல்லது உணவுப் பழக்கம் இதற்குக் காரணமாக இருக்குமா? இல்




லையேல் வேறு ஏதாவது காரணங்களால் புற்றுநோய் ஏற்படுகின்றதா? இதைக் கட்டுப்படுத்த நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

***பதில்***: பழக்கவழக்கங்களால் நோய் ஏற்படுவதும் நோய் பரவுவதும் சகஜம். வேலைசெய்யும் இடங்களில் சூழல் மாசுபடும் பட்சத்தில் சில நோய்கள் ஏற்படுவதுண்டு. முக்கியமாக இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் ஆலைகளில், பலதரப்பட்ட சுவாசத்திற்கு ஒவ்வாத வாயுக்கள் புற்றுநோயைத் தூண்டலாம். அல்லது சிலவகையான தொடர் நோய்கள் ஏற்படலாம்.

புகைபிடித்தல், அதிக வாசனைத்திரவியங்களை உணவுடன் சேர்த்தல், கிருமிநாசினிகள் அடிக்கடி விசிறப்பட்ட மரக்கறி வகைகளை உட்கொள்ளல் போன்றவை உடலில் புற்றுநோயைத் தூண்டக் கூடியவை. சுகாதாரக்கல்வி மூலம் விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே ஏற்படுத்தும் பட்சத்தில் இவற்றை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

***கேள்வி***: இருதயநோய் கூடுவதற்கான காரணம் என்ன? சமூகத்தில் இதன் பாதிப்பைக் கட்டுப்படுத்த நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

***பதில்***: இக்காலத்தில் சமூகத்தினிடையே இருதயநோய் கூடிவருவதைக் காணமுடிகிறது. வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், சூழலியல் நிகழ்வுகள், உணவு வகைகளில் மாச்சத்து, கொழுப்பு போன்றவை இரத்தச் சுற்றோட்டத்தில் கொலொஸ்ரோல் போன்ற கொழுப்பினை உயர்த்தி விடுகிறது. இப்பதார்த்தமானது சிறு இரத்தநாடிகளின் துவார விட்டத்தில் சுருக்கம் ஏற்படும் பட்சத்தில், போதியளவு பிராணவாயுவினை ஒருசில பகுதிக்குக் காவிச்செல்லாவிடின் இருதய மாரடைப்பு ஏற்பட வாய்ப்புண்டு. அமைதியான வாழ்க்கை இந்நோயைத் தணிப்பதற்கு இன்றியமையாதது. புகைப்பிடித்தலும் இருதய நோய்க்கு ஓர் முக்கிய காரணியாக அமைகிறது. காசைக் கரியாக்காது, அடக்க ஒடுக்கமான வாழ்வினைக் கடைப்பிடித்தால் சுகம் அனுபவிக்கலாம்.

***கேள்வி***: இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு ஒரு சாதாரண மனிதன் என்ன செய்யவேண்டும்? அதற்காக நீங்கள் கூறும் புத்திமதி என்ன? கட்டுப்படுத்துவதற்கு என்னென்ன நடைமுறைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதற்கான விளக்கம் தருவீர்களா?

***பதில்***: சமூகத்தில் உலாவும் அநேகருக்கு இவ்வகையான கொழுப்பு - இரத்தச் சுற்றோட்டத்தில் கூடுதலாகக் காணப்படுகிறது. சமமான உணவு அருந்துவது கிடையாது. முக்கியமாக, நம்மவர்கள் இலைக்கறி வகைகளை ஒதுக்கிவிட்டு, வயிறாரச்சாப்பிட்டால் போதுமென்ற கொள்கையைத்தான் அநேகர் கையாளுகின்றார்கள்.

உள்ளி, வல்லாரை, அகத்தி, போன்றவை கொலெஸ்ரோலை ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதாக அறிகிறோம். மாமிசம், மீன் சாப்பிடுவதானால்- கொழுப்புக் குறைந்த வர்க்கங்களை உட்கொள்ளலாம்.

***கேள்வி***: பழங்களும், மீனும் பழுதடையாமல் இருக்க, அண்மைக் காலமாக இரசாயனம் பாவிக்கப்படுகிறது. மரக்கறிகள் தோட்டத்தில் உற்பத்தி செய்யும்போது அளவிற்கு அதிகமாக இரசாயனம் விசிறப்படுகிறது. இந்த உணவுப் பொருட்களை மனிதன் உட்கொள்வதால் என்ன பாதிப்புகள் ஏற்படப்போகின்றது என்பதைக் கூறமுடியுமா?

***பதில்***: பழங்களை விரைவில் பழுக்க விசிறும் இரசாயனக்கலவைகளால், பலதரப்பட்ட பக்கவிளைவுகள் ஏற்படலாம். முக்கியமாக ஒவ்வாமை, புற்றுநோயைத் தூண்டும் காரணிகளாய் அமையலாம். இச்சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகத்தான் விவசாய இலாகாவினர் - இயற்கை உரம், இயற்கையில் கிடைக்கக்கூடிய சில தாவரங்களின் சேர்க்கைகளை கிருமிநாசினியாகப் பாவிக்



டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை

கும் முறைகளைச் சிபார்சு செய்து வருகிறார்கள்.

***கேள்வி***: நீரிழிவு பற்றி, நீரிழிவு நோயாளிகளுக்கும் ஏனைய பொது மக்களுக்கும் நீங்கள் கூறவிரும்பும் வைத்திய ஆலோசனை என்ன?

***பதில்***: உலகிலேயே இந்நோய் ஓர் தொடர்நோயாகத் தாண்டவமாடுகிறது. சிலருக்கு இளம்வயதிலேயே இந்நோய் ஏற்பட்டு, வாழ்நாள் முழுவதும் அவஸ்தைப்படுவதை நாம் காண்கிறோம்.

இந்நோய்க்கு ஓர் பரம்பரைத் தொடர்புண்டு. பழக்க வழக்கங்கள், உணவில் கட்டுப்பாடு, போதிய உடற்பயிற்சி போன்றவை இந்நோய் ஏற்படுவதைத் தடுக்க உதவுகிறது. இந்நோயானது பல வகையான பக்கவிளைவுகளை ஏற்படுத்த வல்லது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**நேர்காணல்:**
**கா.பஞ்சரத்தினம்**

* * * * * * * * * * * * * * * * * * * *

# போர் ஓய்ந்தாலும் - ஓயாத கண்ணிவெடிப் பயம்

சுமார் ஓராண்டுக்கு முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் கையெழுத்திட்டனர். போர் ஓய்ந்து- போர் நிறுத்தம் ஏற்பட்டு பொது மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு வழி சமைத்தல் என்பது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முக்கியமான ஒன்றாகும். இந்த இயல்புநிலையினூடே சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி அரசியல் ரீதியாக ஒரு நியாயமான சமாதானத் தீர்வை அடைவது இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இவை இரண்டும் செயற்படுத்தப்படுகின்ற அதே வேளையில் தமிழ்மக்களின் புனர்நிர்மாணப்பணிகள் ஏககாலத்தில் நடைபெறவேண்டும் என்பது எம்முடைய நியாயமான எதிர்பார்ப்பாகும்.

ஆனால், தமிழ்மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்புவதற்குத் தடையாக இன்று இராணுத்தினர் செயற்பட்டுவருவதை நாமறிவோம். இராணுவச் சமநிலையும் உயர்பாதுகாப்பு வலயங்களையும் காரணங்காட்டி தமிழ்ப் பொதுமக்களின் வீடுகள் மற்றும் பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் போன்றவற்றிலிருந்து இராணுவம் விலக மறுத்து வருகின்றது. போதாக்குறைக்குப் பல இடங்களில் புதிதாக இராணுவ முகாம்களை அமைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவருகின்றது.

இதேவேளை - பொதுமக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்பாமல் தடையாக இருக்கும் காரணிகளில் தமிழர் தாயகப் பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள் முக்கியமானதாக உள்ளது.

இன்று தமிழர் பகுதிகளில் இராணுவத்தால் புதைக்கப்பட்டுள்ள இந்த விஷ வித்துக்கள் எம்மவரின் நிகழ்காலத்தை மட்டுமல்ல எதிர்காலத்தையும் பாதிக்கக்கூடியவையாக - பாழடிக்கக்கூடியவையாக உள்ளன. கண்ணிவெடிகள் மிதிவெடிகள் என்று குறிக்கப்படும்பொழுது ஏதோ அந்தப் பகுதிகளுக்குள் போனால் மட்டும் ஆபத்து, அதனைத் தவிர்த்துவிட்டால் இல்லை விபத்து, என்ற வகையில் சிந்திப்பவர்களும் உண்டு. ஆனால், இந்தக் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பன தமிழ் மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்புவதை மட்டும் பாதிப்பவை அல்ல. அவை தமிழ் மக்களுக்குரிய புனர்நிர்மாணப் பணிகளையும் பாதிக்கின்றன. அது மட்டுமல்லாது எதிர்காலத்தில் அவை சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கூடப் பாதிக்கும் வகையில் விஸ்வரூபம் எடுக்கக்கூடும்.

அதனால்தான் கண்ணிவெடிகள் குறித்த பிரச்சினைகள் உண்மையில் பன்முகப்பட்டவை மட்டுமல்ல பாரதூரமானவையுமாகும் என்று சொல்ல விழைகின்றேம்.

கண்ணிவெடிகளால் ஏற்பட்ட - ஏற்படுகின்ற - ஏற்படப்போகின்ற ஆபத்துக்கள் பிரச்சினைகள் குறித்துச் சிந்திப்பதற்கு இதுவே தருணமாகும். போர்க்காலத்தின்பொழுது போராளிகளும், மக்களும் இறப்பதை, காயப்படுத்துவதை, ஊனப்படுவதைக் கண்டு உளமார வருத்தப்பட்டிருக்கின்றோம். ஆனால் போர்க்காலம் ஓய்ந்து சமாதானத்திற்கான தோற்றம் உருவாகியுள்ள இந்தக் காலகட்டத்தில்கூட மக்கள் இறப்பதை, ஊனப்படுவதை எப்படி நியாயப்படுத்தமுடியும்?

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கண்ணிவெடிகள் வெடித்ததன் காரணமாக 26 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டது மட்டுமல்லாமல், சுமார் நூறுக்



கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் காயப்பட்டார்கள் என்று ஐ.நா. சபையின் அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. ஆனால் காயமுற்று ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை இன்னமும் பன்மடங்கு அதிகம் என்றே உள்ளூர்ச்செய்திகள் தெரிவித்துள்ளன.

போர்க்காலத்தில் இறப்பதும் ஊனப்படுவதும் எதிர்பார்க்கக்கூடியதென்றால் அமைதிக்காலத்தில் இறப்பதும் ஊனமுறுவதும் எதிர்பார்க்கப்படாததொன்று மட்டுமல்ல ஏற்கக் கூடிய விடயமுமல்ல.

கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படாத பட்சத்தில் எமது மக்கள் இறப்பதும் ஊனமுறுவதும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே போனால் துயரமான நிகழ்காலச் சமுதாயம் ஒன்றும், ஊனமுற்ற எதிர்காலச் சந்ததி ஒன்றும் உருவாகி வருவதைத் தடுக்கமுடியாமற் போய்விடும். எப்பொழுது கண்ணிவெடிகள் வெடிக்குமோ என்ற அச்சத்திற்குள்ளேதான் எமது மக்கள், தங்கள் வாழ்க்கையைத் தொடரவேண்டிய அவலநிலை உருவாகும்.

அதுமட்டுமல்லாது போர்க்காலங்களில் பயன்படுத்தப்படாத விளைநிலங்கள், விவசாயக் காணிகள் போன்றவை இன்றைய யுத்தம் ஓய்ந்த காலத்திலும் வீணாகத் தரிசாகப் போய்விடக்கூடிய அபாயமும் ஏற்படும். தமிழரின் காணி வயல்கள், கண்ணி வயல்களாக நீடிக்கும் நிலை ஏற்படக்கூடும். விவசாயத்துறையில் தன்னிறைவு காணத்துடிக்கும் எம்மவர் இலட்சியம் இயலாத செயலாகவும் போய்விடலாம்.

பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்கள் பல திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் சிங்களக் கிராமங்களாக மாறிவருகின்றன. இந்த வேளையில் தமிழ்ப் பிரதேசங்களிலும் தமிழ்மக்கள் மீளக் குடியமர முடியாதவாறு இக்கண்ணி வெடிகள் முட்டுக்கட்டை போடுகின்றன. இன்று அரசியல் ரீதியாக சமாதான வழியில் பேச்சுவார்த்தைகளை நடாத்தித் தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு ஒன்றைக் காணலாம் என்ற நம்பிக்கை எம்மவர்கள் மத்தியில் இருப்பதை நாம் காண்கின்றோம். ஆனால் தமிழ் மக்கள் தத்தமது பாரம்பரிய நிலங்களில் மீளக்குடியமரமுடியாத இந்த நிலையானது முறையான, நீதியான ரீதியான தீர்வினை அடைவதற்குத் தடையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே, தமிழ்ப் பிரதேசங்களில் புதைந்து கிடக்கின்ற இந்தக் கண்ணிவெடிகள் தருகின்ற, தரக்கூடிய பிரச்சினைகள் பாரதூரமானவை என்பதை இங்கே நாம் அறியக்கூடியதாக உள்ளது. எமது மக்களின் வேலைவாய்ப்புகளுக்குக் கண்ணிவெடிகள் தடையாக உள்ளன. எமது தேசத்தின் விவசாயத் தன்னிறைவு முயற்சிக்கும் கண்ணிவெடிகள் ஆப்பு வைக்கின்றன என்பதை நாம் இத்தருணத்தில் கவனத்திற்கொள்ள வேண்டும். ✪

**- சபேசன்.**

# பக்தாத் கட்டடங்கள் மீது அமெரிக்கா குண்டு மழை!


கற்குவியலாக மாறியுள்ள மாடிக் கட்டடம் ஒன்று.

பக்தாத்தில் உள்ள முக்கிய அரச கட்டடங்கள் மீது, அமெரிக்கப் படைகள் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றன. பக்தாத்திலுள்ள ஜனாதிபதி மாளிகை ஒன்றைக் கைப்பற்றிய பின்னர், இத்தாக்குதல்களை அமெரிக்கப் படைகள் ஆரம்பித்துள்ளன.

ஏ-10 தண்டர் போல்ட் விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல்களையும், B-1 குண்டுவீச்சு விமானங்கள் 907 கிலோ குண்டுகளை பக்தாத்தில் உள்ள முக்கிய கட்டடங்கள் மீது வீசியும், அவற்றைத் தரை மட்டமாக்கி வருகின்றன. இத்தாக்குதல்களினால், 14 ஈராக்கியப் பொது மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். குண்டுகள் வீழ்ந்த பகுதிகளில் 15 மீற்றர் அகலமான பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து சடலங்கள் மீட்கப்படுகின்றன. ஒரே குடும்பத்தில் - ஒரு குழந்தை உட்பட 9 பேர் இக்குண்டுவீச்சுக்களினால் பலியாகியுள்ளனர். கட்டடங்கள் இருந்த இடங்களில் இப்போது கற்குவியலும் நெளிந்த இரும்புத் துண்டங்களும் சிதைந்த தளபாடங்களும் காணப்படுகின்றன.

குண்டுவீச்சுக்கள் அதிகமாக நடந்த பக்தாத்தின் அல் - மன்சூர் பகுதியிலேயே, கடந்த சில தினங்

உலகவலம்

களுக்கு முன் சதாம் நடமாடி மக்களைச் சந்தித்து உரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, அமெரிக்கப் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகைகளில் ஒன்று அல் - மன்சூர் பகுதிக்கு அருகில்தான் இருக்கிறது.

# ஈராக் போரில் காயமுற்றவர்களால் வைத்தியசாலைகளில் நெருக்கடி!


இரவு - பகலாக காயமுற்றவர்களுடன் போராடும் ஈராக்கிய வைத்தியர்கள்.

(பக்தாத்)

பக்தாத் வைத்தியசாலைக்கு வரும் காயமுற்ற ஈராக்கியர்களால், மருந்துகளின் இருப்புகள் குறைவடைந்து வருவதாகவும், நீர் மற்றும் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டமை மேலும் நெருக்கடியைத் தருவதாகவும் செம்பிறைச் சங்கம் அறிவித்துள்ளது.

மணித்தியாலத்துக்கு 100 பேர் என்ற வகையில் காயமுற்றவர்கள் வருகின்றனர். சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துப்பொருட்கள் முடிவடையும் கட்டத்தை நெருங்கிவிட்டதாக அங்கு பணியாற்றும் சர்வதேச செம்பிறைச் சங்கம் அறிவித்துள்ளது. கடந்த சனியன்று பக்தாத் அருகே போர் ஆரம்பித்ததையடுத்தே இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. வைத்தியர்கள் இரவு பகலாகத் தொடர்ந்து பணியாற்றிக் களைப்புற்றுள்ளதாகவும் செம்பிறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# வெறிச்சோடிக் காணப்படும் ஜனாதிபதி ஆடம்பர மாளிகை!


மாளிகையை வியப்புடன் பார்க்கும் அமெரிக்கப் படைகள்.

மத்திய பக்தாத்தில் உள்ள சதாமின் ஜனாதிபதி மாளிகைகளில் ஒன்று, அமெரிக்கப் படைகளால் கைப்பற்றப்பட்டதையடுத்து அந்த மாளிகை தொடர்பான விபரங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இந்த மாளிகையினுள் நின்று தம்மைப் படம்பிடித்துக்கொள்வதில் அமெரிக்க வீரர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மிகவும் அலங்காரமாக, உயர்ரக பொருட்களால் நிரம்பியுள்ள இந்த மாளிகையின் சில பகுதிகள், தாக்குதலின்போது சேதமுற்றுள்ளன. ரைகிறிஸ் ஆற்றோரமாக உள்ள இக்கட்டடம், நிர்வாக பீடமாக இல்லாது குடியிருப்பாகவே இருந்திருக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது.


பெரிய படுக்கையறைகள், பிரெஞ்சுத் தளபாடங்கள் என்பன தூசுபடிந்த நிலையில் காணப்படுகின்றன. ஒவ்வொரு அறைக்குள்ளும் பல தொலைக்காட்சிப்பெட்டிகள் காணப்படுகின்றன. மொட்டைமாடியில் குளியலுக்கான தடாகம் அமைக்கப்பட்டுள்ளது. சமையலறை நீர்க்குழாய்களிலிருந்து நீர் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தது. மாளிகைக்கு வெளியே அழகான தோட்டமும் நடுவில் அமைந்திருந்த நீர்வீழ்ச்சித் தடாகமும் காய்ந்துபோன நிலையில் காணப்படுகின்றன.

மாளிகையில் காணப்படும் சதாமின் மிகப்பெரிய உருவப் படங்கள் அமெரிக்கப்படைகளால் சிதைக்கப்பட்டுவருகின்றன.

# அமெரிக்க விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது

பக்தாத் மீது நேற்று குண்டுவீச்சுத் தாக்குதல் நடாத்திக்கொண்டிருந்த தண்டர் போல்ட் விமானம், ஈராக்கியப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது. எனினும், விமானி உயிர் தப்பியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சுட்டுவீழ்த்தப்பட்ட ஏ-10 தண்டர்போல்ட்



# பிரிட்டிஷ் படைகளிடம் பஸ்ரா நகர் வீழ்ந்தது!

(லண்டன்)


பஸ்ரா நகரை ஏறக்குறைய கைப்பற்றிய நிலையில் உள்ளோம் என பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்துளனர். அங்குள்ள ஈராக்கியப் படைகள் தப்பியோடிவிட்டதையடுத்து, ஈராக்கிய அரச சொத்துக்களைப் பெருமளவு மக்கள் சூறையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பாடசாலைகள், வைத்தியசாலைகள், வங்கிகள், ஹோட்டேல்கள் என்பவற்றிலிருந்து பெருமளவு பொருட்கள் பஸ்ரா மக்களால் கொள்ளையிடப்பட்டன. பிரிட்டிஷ் படைகள், இந்தச் சூறையாடல்களைத் தடுக்கவில்லை.

பஸ்ராவில் உள்ள ஆடம்பரமான ஜனாதிபதி மாளிகையையும் பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றியுள்ளதாகவும், மாளிகையினுள் தற்போது படையினர் தேடுதல் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் - பஸ்ராவுக்கான போரில், கடந்த ஞாயிறன்று பலியான 11 பிரிட்டிஷ் படையினரின் சடலங்கள், விமானப் படையின் சரக்கு விமானத்தில் பிரிட்டனுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

# ஈராக் போர்க்களம்


பக்தாத் குடியரசு மாளிகைக்கு அருகில் விமானக் குண்டுவீச்சினால் எழும் பெரும் புகைமண்டலம்.


பக்தாத் மத்திய பகுதியில் - பிரபல ஹோட்டேல் ஒன்றுக்கருகே இடம்பெற்ற குண்டுவீச்சுகளின் பின்னர் எழும் தீச்சுவாலை.


ரைகிறிஸ் ஆற்றின் மேலாக உள்ள பாலத்தைக் கடந்து பக்தாத்தினுள் நுழையும் அமெரிக்கப் படையினர்.


பக்தாத் மீதான குண்டுவீச்சுக்கு வசதியாக, வெளிச்சக்குண்டுகளை வீசும் அமெரிக்க தண்டர் போல்ட் விமானம்.


நகர்ப்புற மோதலுக்காகத் தயாராகும் அமெரிக்க விசேட படையினர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி**

மலேசியாவில் இரண்டு வருடம் பிரித்தானியாவில் ஒரு வருடமும் கல்விகற்று நீங்களும் ஒரு பொறியியலாளராகலாம்.

☆ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
☆ ஆகக்குறைந்த தகைமை G.C.E (O/L)
☆ பாடநெறிக்கட்டணத்தை இலகுவாக தவணை முறையில் செலுத்தலாம்.
☆ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.
Far Overseas Educational Consultants
444C 2/1,Galle Road,Ratmalana
யாழ்.தொடர்புகளுக்கு 30 1/1 சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059 (வ.கி.மாகாண இணைப்பாளர்)
072-859041
E.Mail:- ecolenviros@ dynaweb.lk
(சி-765)

# தமிழரின் ராணுவ பலம் சாதாரணமானதல்ல!

## திருமலையில் இளம்பரிதி உரை

எம்மீது திணிக்கப்பட்ட போர் அநியாயமானது, ஆனால்- விடுதலைக்கான போராட்டம் நியாயமானது என, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, திருகோணமலையில் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெறும் இசை, நடன, நாடக விழாவில் சிறப்புரையாற்றியபோது தெரிவித்தார்.

மூவினங்களையும் சேர்ந்த ஏராளமான கலைஞர்களும் ஆர்வலர்களும் கலந்துகொண்ட இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில்,

போர் அனைத்தையும் அழிக்கும். ஆனால், போராட்டம் இழந்தவற்றையும் எதிர்பார்ப்பையும் பெற்றுத்தரும். பசுமையான இடத்தில் மூவினத்தையும் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடிய மானுடத்தின் தமிழ்க் கூடலைக் காணும்போது மகிழ்வாக இருக்கிறது. இனக்குரோதத்தின் பின் இன்று ஒன்று சேர்ந்துவாழ மூவின மக்களும் முற்படுகின்றனர். சிங்கள மக்கள் தனித்துவமாக வாழ்வதுபோல் தமிழ், முஸ்லிம் மக்களும் வாழ வேண்டும் என்பதுதான் எம் எதிர்பார்ப்பு. தலைவரின் எண்ணத்தில் எப்போதோ தோன்றிய சிந்தனை இன்று நிறைவேறி வருகிறது.

இனவாத அடக்குமுறையால் இரத்த ஆறு ஓடியது. தலைமையின் திடம், உறுதி, தீர்க்க தரிசனம் என்பவற்றால் சமாதானச் சூழலைச் சந்தித்துள்ளோம் என்றார். (04)

# சுவிஸ் அதிகாரிகளுடன் பாலா சந்தித்துப் பேச்சு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பேர்ணில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில், சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இருவர் கலந்துகொண்டனர். இதன்போது, சமஷ்டி மற்றும் சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய போக்கு என்பன குறித்து கலந்துரையாடப்பட்டது.

# மீள்குடியேற்ற உதவித்தொகை முஸ்லிம்களுக்கு கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 12 ஆண்டுகளுக்குப் பின் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்கு இன்னமும் மீள்குடியேற்றத்துக்கான உதவித் தொகை வழங்கப்படவில்லை என அம்மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உதவித் தொகையான 25 ஆயிரம் ரூபாவை விரைவில் கிடைக்க ஆவன செய்யத்தவறின், யாழ்.பிரதேச செயலகம் முன்பாக, விரைவில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருககப்போவதாக - யாழ். முஸ்லிம் பொது அமைப்புக்குழு, அமைச்சர் மகேஸ்வரனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

# அகாஷி அமெரிக்கா பயணம்

இலங்கைக்கான, ஜப்பானிய அரசின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி, எட்டு நாள் விஜயமாக அமெரிக்கா சென்றுள்ளார். இவர் இன்று அமெரிக்க மற்றும் ஐ.நா. அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

## ஈ.பி.டி.பி...

தீமூட்டியதுடன், அங்கு திரண்டு ஈ.பி.டி.பியினருக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், அப்பகுதியில் நின்ற பொலிஸாரிடம் பாதுகாப்பைக் கோரியதாகத் தெரியவருகின்றது.

## கடல் மோதல்கள்...

கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்றைய சந்திப்பின்போது, கடற்பரப்பில் அடிக்கடி ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் குறித்தும் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் இருந்து வரும் கடல் எல்லைகள் தொடர்பான முரண்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (லி)

(முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

## இராணுவப்...

போராளிகளின் நடமாட்டங்களை இராணுவத்தினர் தடுக்கமுற்பட்டனர். இதனால் ஏற்பட்ட முறுகலைத் தவிர்க்கவே, கண்காணிப்புக்குழு நேற்றுப் பேச்சுக்கள் நடத்தியது.

பேச்சுக்களின் முடிவில்- இது பற்றி எதிர்வரும் 21 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், படையினரும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் மூதூர் சூனியப் பகுதியில் சந்தித்து கலந்துரையாடுவதாக முடிவு எடுக்கப்பட்டது.

21 ஆம் திகதி சந்திப்பில் நல்ல முடிவுகள் எடுக்கப்படாவிடின், விடுதலைப் புலிகள் தன்னிச்சையாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளை கடந்து தமது பகுதிகளுக்குச் செல்வர். பின்னர் இதை போறநிறுத்த மீறல் எனக் கூறக்கூடாது என கேணல் பதுமன், கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் தெரிவித்தார்.

இதேவேளை- கண்காணிப்பாளர்களின் தொகையை 47 இலிருந்து 57ஆக உயர்த்தவுள்ளதாகவும்- சம்பூரில் கண்காணிப்புக்குழு அலுவலகம் ஒன்றைத் திறக்கவிருப்பதாகவும் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பின்போது, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளைக் காட்டும் வரைபடங்களையும் கேணல் பதுமன், ரெலவ்சனிடம் ஒப்படைத்தார்.

புதிய பிரிவு
A/L - 2005
(கலை, வர்த்தகம்)
ஆரம்பம்
12-04-2003 சனி
காலை 8.30 (பு.நே)
DMI
யாழ்நகர்
(சி-769)

# வொஷிங்ரன் மாநாட்டில் இந்தியாவும் பங்குபற்றும்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் அமைதிப் பேச்சுக்களுக்கு, அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவு கோரி வொஷிங்ரனில் இம்மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச மாநாட்டில் இந்தியா பங்கேற்கும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

ஜேர்மனி, ஜப்பான், நோர்வே, பிரிட்டன் உட்பட 30 நாடுகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தென்னாபிரிக்காவுக்கு பீரிஸ்

(கொழும்பு)

இன ஒடுக்கத்தை மேற்கொண்ட தென்னாபிரிக்கா, ஜனநாயகப் பாதைக்குத் திரும்பிய விதம் குறித்து ஆராய்வதற்காக, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

தென்னாபிரிக்காவில் சமாதான முயற்சிகள் எவ்வாறு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது என்பது குறித்தும், அமைச்சர் ஆராய்வார் என்று அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது பேராசிரியர் பீரிஸ், தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரருமான நெல்சன் மண்டேலாவைச் சந்திக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

செலிங்கோ
பிரணாம புலமைப்பரிசில்





இந்தப் பொன் கொழிக்கும் பொன்னான நாட்டினில் பிறந்த பிள்ளைச் செல்வங்களைக் கௌரவிக்கும் முகமாக 2 ஆவது சிலிங்கோ பிரணாம புலமைப் பரிசில் பரிசளிப்பு விழா 2003 ஜனவரி 25 இல் நடாத்தப்பட்டது. மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் தங்கள் திறமைகளை வெளிக்காட்டிய 75 மாணவர்களை கௌரவித்து பிரணாம புலமைப் பரிசில்களை வழங்கினோம்.

இந்தப் பரிசளிப்பில் கௌரவிக்கப்பட்ட இந்த நாட்டு எதிர்காலத் தலைவர்களான இந்த மாணவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

யாழ்.மாவட்ட ரீதியில் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் எம்முடன் ஆயுள் காப்புறுதி செய்து கொண்டவர்களின் பிள்ளைகளில் ஆகக் கூடுதலான புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட

செல்வன் சிவசந்திரபோஸ் சகிஸ்னா
(மாணவன், இருதயக் கல்லூரி, கரவெட்டி)

65,000 ரூபா பரிசுத் தொகையையும் மற்றும் பல பெறுமதியான பரிசில்களையும் பெறுகின்றார். அவரையும் திரு.T.F. மனோகரன் (பாடசாலை அதிபர்) அவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு - 7 இல் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது. இவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

மேலதிக விபரங்களுக்கு:-
எமது விற்பனை ஆலோசகர்களுடன் அல்லது
தொ.பே. இலக்கம்: 2225998 உடன் தொடர்பு கொள்ளவும்.

செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட் (ஆயுள்)
இல.560, 562, 2 ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.இல. 2225998
(சி-770)

கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும்
தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகியும் தமிழ் இசைப் பாடகியுமான
ரீ.கே.கலா
இடம்:யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம்:16.04.2003 (புதன்) பி.பகல் 4.00மணி.
தமிழீழ இசைக் கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்
மாபெரும் தமிழ் இசை மாலை
நமது ஈழநாடு
ராம்கோ சீமெந்து



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.